SOCIAL SCIENCE

Contemporary India - II

Textbook in Geography for Class X

ENGLISH - TAMIL VERSION

U6P3L3

© Government of Andhra Pradesh, Amaravati

First Published 2024
New Impression - 2025, 2026

DISCLAIMER
Any form of copying of the content, information and illustrations from this text book is a punishable offence.

All rights reserved

No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means without the prior permission in writing of the publisher, nor be otherwise circulated in any form of binding or cover other than that in which it is published and without a similar condition including this condition being imposed on the subsequent purchaser. The copyright holder of this book is the Commissioner of School Education, Amaravati, Andhra Pradesh.
This book has been printed on 70 GSM, SS Maplitho. Title Page 220 GSM, White Art Card.

Published by Samagra Shiksha & SCERT - Government of Andhra Pradesh, Amaravati.

AP SCERT

Vande Mataram

Vande Mataram!
Sujalam, suphalam, malayaja shitalam,
Shasyashyamalam, Mataram!
Vande Mataram!
Shubhrajyotsna pulakitayaminim,
Phullakusumita drumadala shobhinim,
Suhasinim sumadhura bhashinim,
Sukhadam varadam, Mataram!
Vande Mataram, Vande Mataram!

- Bankimchandra Chatterji

வந்தே மாதரம்

வந்தே மாதரம்!
சுஜலாம் சுபலாம் மலயஜ சீதலாம்
சஸ்யஷ்யாமலாம், மாதரம்!
வந்தே மாதரம்!
ஷுப்ரஜ்யோத்ஸ்னா புலகிதயாமினீம்,
புல்லகுசுமித த்ருமதல ஷோபினீம்
சுஹாஸினிம் சுமதரபாஷிணீம்
சுகதாம் வரதாம், மாதரம்!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

– பங்கிம் சந்திர சாட்டர்ஜி

AP SCERT

Printed in India
at the A.P. Govt., Textbook Press,
Amaravati, Andhra Pradesh.

Our National Anthem | தேசிய கீதம்

Jana-gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata
Panjaba-Sindhu-Gujarata-Maratha
Dravida-Utkala-Banga
Vindhya-Himachala-Yamuna-Ganga
uchchala-jaladhi-taranga
Tava Subha name jage,
tava subha asisa mage,
gahe tava jaya-gatha.
Jana-gana-mangala-dayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Jaya he, Jaya he, Jaya he,
jaya jaya jaya jaya he.

- Rabindranath Tagore

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்த் குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே, தவ சுப ஆசிஸ
மாகே,
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

`இரபிந்திரநாத்தாகூர்

Pledge | உறுதிமொழி

India is my country. All Indians are my brothers and sisters.
I love my country and I am proud of its rich and varied heritage.
I shall always strive to be worthy of it.
I shall give my parents, teachers and all elders respect,
and treat everyone with courtesy. I shall be kind to animals.
To my country and my people, I pledge my devotion.
In their well-being and prosperity alone lies my happiness.

- Pydimarri Venkata Subba Rao

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறப்புகள்.!என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம் பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்பிற்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன்.

இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன். என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன். எல்லோரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன். விலங்குகளிடத்தில் கருணை காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலே நான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

- பைடிமர்ரி வெங்கட சுப்பாராவ்



Social Science

Contemporary India - II

Textbook in Geography for Class X

Contents

1.	Resources and Development வளங்களும் முன்னேற்றமும்	June ஜுன்	6
2.	Forest and Wildlife Resources காடு மற்றும் காட்டு விலங்கு வளங்கள்	July ஜுலை	30
3.	Water Resources நீர் வளங்கள்	August ஆகஸ்ட்	42
4.	Agriculture விவசாயம்	Septemeber செப்டம்பர்	64
5.	Minerals and Energy Resources தாதுப்பொருட்கள் மற்றும் ஆற்றல் வளங்கள்	October அக்டோபர்	88
6.	Manufacturing Industries உற்பத்தி தொழில்கள்	November நவம்பர்	120
7.	Lifelines of National Economy தேசிய பொருளாதாரத்தின் உயிர்நாடிகள்	November டிசம்பர்	146
	Appendix–I பின்னிணைப்பு - 1		172
	Appendix–II பின்னிணைப்பு - 11		174
	Glossary சொற்களஞ்சியம்		175

C1U5Y9

Teacher Corner

N2H3Y6

Student Corner

AP SCERT

LEARNING OUTCOMES

The Students will be able to

Lesson : 1. Resources and Development

1. Recognise the importance of resources in development.
2. Classify various types of resources
3. Analyse the land use pattern and utilization in India.
4. Locate various types of soils on the map of India.
5. Suggest measures to prevent land degradation.

Lesson : 2. Forest and Wildlife Resources

1. Recognise the importance of biodiversity.
2. Suggest methods for conservation of forests.
3. Explain the importance of wildlife resources in ecosystem.
4. Appreciate the significance of environmental movements.
5. Locate forest covered states on the out line map of India.

Lesson : 3. Water Resources

1. Understand the importance of water as a vital natural resource.
2. Explain the causes of water scarcity.
3. Recognize the significance of water conservation techniques.
4. Analyze the role of Multipurpose River Projects in irrigation, electricity generation, flood control and their impact on environment.
5. Identify the need for Sustainable Water Management to ensure availability for future generations.

Lesson : 4. Agriculture

1. Analyse the importance of agriculture in India.
2. Classify different types of agricultural practices.
3. Empathise with the difficulties faced by farmers in drought prone areas.
4. Locate the states that are leading producers of various crops on the map of India.
5. Appreciate the Bhoodan-Gramdan movement led by Vinoba Bhave.

APSCERT

கற்றல் விளைவுகள்

மாணவர்கள்.....

1. வளங்களும் முன்னேற்றமும்

1. வளர்ச்சியில் வளங்களின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பர்.
2. பல்வேறு வகையான வளங்களை வகைப்படுத்துவர்.
3. இந்தியாவில் நில பயன்பாட்டு முறை மற்றும் பயன்பாட்டை பகுப்பாய்வு செய்வர்.
4. இந்தியாவின் வரைபடத்தில் பல்வேறு வகையான மண்ணைக் கண்டறிவர்.
5. நிலச் சீரழிவைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பர்.

2. காடு மற்றும் காட்டு விலங்கு வளங்கள்

1. பல்லுயிர் பெருக்கத்தின் முக்கியத்துவத்தை உணருவர்.
2. காடுகளைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளைப் பரிந்துரைப்பர்.
3. சுற்றுச்சூழல் அமைப்பில் வனவிலங்கின் முக்கியத்துவத்தை விளக்குவர்.
4. சுற்றுச்சூழல் இயக்கங்களின் முக்கியத்துவத்தைப் பாராட்டுவர்.
5. இந்தியாவின் புறவரி வரைபடத்தில் காடுகளை உள்ளடக்கிய மாநிலங்களைக் கண்டறிவர்.

3. நீர் வளங்கள்

1. ஒரு முக்கிய இயற்கை வளமாக தண்ணீரின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வர்.
2. தண்ணீர் பற்றாக்குறைக்கான காரணங்களை விளக்குவர்.
3. நீர் பாதுகாப்பு நுட்பங்களின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பர்.
4. நீர்ப்பாசனம், மின்சார உற்பத்தியில் பல்நோக்கு நதி திட்டங்களின் பங்கை பகுப்பாய்வு செய்வர் மற்றும் வெள்ளக் கட்டுப்பாடு, அவற்றின் சுற்றுச்சூழல் தாக்கத்தை அறிவர்.
5. எதிர்கால சந்ததியினருக்கு கிடைப்பதை உறுதி செய்ய நிலையான நீர் மேலாண்மையின் அவசியத்தை அடையாளம் காண்பர்.

4. விவசாயம்

1. இந்தியாவில் விவசாயத்தின் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்வர்.
2. பல்வேறு வகையான விவசாய நடைமுறைகளை வகைப்படுத்துவர்.
3. வறட்சி நிலவும் பகுதிகளில் விவசாயிகள் எதிர்கொள்ளும் சிரமங்களை உணர்வர்.
4. இந்தியாவின் வரைபடத்தில் பல்வேறு பயிர்களின் உற்பத்தியில் முன்னணியில் இருக்கும் மாநிலங்களைக் கண்டறிவர்.
5. வினோபா பாவே தலைமையிலான பூதான்-கிராமதான் இயக்கத்தைப் பாராட்டுவர்.

APSCERT

Lesson : 5.Minerals and Energy Resources

1. Understand the mineral formation process .
2. Classify various minerals according to their components.
3. Distinguish between different types of mining processes.
4. Analyse the production of manganese and lime stone and their availability in India.
5. Locate the places of mineral reserves in the map of India.

Lesson : 6.Manufacturing Industries

1. Learn about manufacturing process and interrelationship between agriculture and industries.
2. Differentiate between agriculture and mineral based industries.
3. Locate major textile industrial areas in India map.
4. Know the importance of various industries in India like cotton, sugar, fertilizer, cement, automobile and IT.
5. Analyse the causes of different types of pollution and suggest the measures to control them.

Lesson : 7. Lifelines of National Economy

1. Understand the role played by the means of transport in the development of India.
2. Appreciate the role of golden quadrilateral, super highways and the national highways in facilitating transportation of goods and people.
3. Locate important cities connected by the highways and the major railway zones in the map of India.
4. Locate major sea ports and airports in India.
5. Analyse the increasing importance of IT and communication.
6. Analise the current state of tourism and trade in India and propose strategies for future improvement.

AP SCERT

5. தாதுப் பொருட்கள் மற்றும் ஆற்றல் வளங்கள்

1. தாது உருவாக்கம் செயல்முறையை புரிந்து கொள்வர்.
2. பல்வேறு கனிமங்களை அவற்றின் கூறுகளுக்கு ஏற்ப வகைப்படுத்துவர்.
3. பல்வேறு வகையான சுரங்க செயல்முறைகளை வேறுபடுத்துவர்.
4. மாங்கனீசு மற்றும் சுண்ணாம்பு கல் உற்பத்தி மற்றும் இந்தியாவில் அவற்றின் கிடைக்கும் தன்மையை பகுப்பாய்வு செய்வர்.
5. இந்திய வரைபடத்தில் கனிம இருப்பு உள்ள இடங்களைக் கண்டறிவர்.

6. உற்பத்தி தொழில்கள்

1. உற்பத்தி செயல்முறை மற்றும் விவசாயம் மற்றும் தொழில்களுடன் அதன் தொடர்பு பற்றி அறிவர்.
2. விவசாயம் மற்றும் கனிம அடிப்படையிலான தொழில்களை வேறுபடுத்துவர்.
3. இந்திய வரைபடத்தில் உள்ள முக்கிய ஜவுளி தொழில்துறை பகுதிகளைக் கண்டறிவர்.
4. இந்தியாவில் பருத்தி, சர்க்கரை, உரம், சிமெண்ட், ஆட்டோமொபைல் மற்றும் தகவல் தொழில் நுட்பம் போன்ற பல்வேறு தொழில்களின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வர்.
5. பல்வேறு வகையான மாசுபாட்டிற்கான காரணங்களை ஆராய்ந்து அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைப்பர்.

7. தேசியப் பொருளாதாரத்தின் உயிர் நாடிகள்

1. இந்தியாவின் வளர்ச்சியில் போக்குவரத்து ஆற்றிய பங்கைப் புரிந்து கொள்வர்.
2. தங்க நாற்கர சாலைகள் அதிவேக நெடுஞ்சாலைகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைகள் சரக்குகள் மற்றும் மக்களின் போக்குவரத்தை எளிதாக்குவதில் உள்ள பங்கைப் பாராட்டுவர்.
3. இந்திய வரைபடத்தில் நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கிய ரயில்வே மண்டலங்களால் இணைக்கப்பட்ட முக்கியமான நகரங்களைக் கண்டறிவர்.
4. இந்தியாவில் உள்ள முக்கிய கடல் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களைக் கண்டறிவர்.
5. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்புகளின் அதிகரித்துவரும் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்வர்.
6. இந்தியாவில் சுற்றுலா மற்றும் வர்த்தகத்தின் தற்போதைய நிலையை பகுப்பாய்வு செய்து எதிர்கால முன்னேற்றத்திற்கான உத்திகளை முன்மொழிவர்.

AP SCERT

1 RESOURCES AND DEVELOPMENT

> Can you identify and name the various items used in making life comfortable in our villages and towns. List the items and name the material used in their making.

Everything available in our environment which can be used to satisfy our needs, provided, it is technologically accessible, economically feasible and culturally acceptable can be termed as 'Resource'.



Fig. 1.1: Interdependent relationship between nature, technology and institutions

The process of transformation of things available in our environment involves an interactive relationship between nature, technology and institutions. Human beings interact with nature through technology and create institutions to accelerate their economic development.

Do you think that resources are free gifts of nature as is assumed by many? They are not. Resources are a function of human activities. Human beings themselves are essential components of resources. They transform material available in our environment into resources and use them. These resources can be classified in the following ways–

(a) On the basis of origin – biotic and abiotic
(b) On the basis of exhaustibility – renewable and non-renewable
(c) On the basis of ownership – individual, community, national and international
(d) On the basis of status of development – potential, developed stock and reserves.



Fig. 1.2: Classification of resources

APSCERT

B3S6V4

1 வளங்களும் முன்னேற்றமும்

நம் கிராமங்களிலும் நகரங்களிலும் வாழ்க்கையை வசதியாக மாற்றுவதில் பயன்படுத்தப்படும் பல்வேறு பொருட்களை கண்டறிந்து அவற்றின் பெயர்களை உங்களால் கூற இயலுமா? பொருட்களை பட்டியலிட்டு அவற்றை தயாரிப்பதில் பயன்படுத்தும் பொருட்களின் பெயர்களைக் கூறவும்.

நம் சுற்றுப்புறத்தில் கிடைக்கப்பெற்று நமது தேவைகளை நிறைவு செய்து, வழங்கப்படும் தொழில்நுட்ப அளவில் கிடைக்கப்பட்டு பொருளாதார அளவில் சாத்தியமாகவுள்ள, கலாச்சார அளவில் ஏற்றுக்கொள்ள கூடியதை 'வளம்' என்று கூறுவர்.



படம். 1.1: இயற்கை, தொழில்நுட்பம் மற்றும் நிறுவனங்களுக்கிடையே ஒன்றுக்கொன்று தொடர்புடையவை

சுற்றுப்புறத்தில் கிடைக்கக்கூடிய பொருட்களின் மாற்றச் செயல்முறையில் இயற்கை, தொழில்நுட்பம் மற்றும் நிறுவனங்களுக்கிடையே உள்ளார்ந்த தொடர்பு அடங்கியுள்ளது. மனிதர்கள் தொழில்நுட்பத்தின் வாயிலாக இயற்கையிடம் தொடர்புகொண்டு தங்களுடைய பொருளாதார முன்னேற்றத்தை துரிதப்படுத்துவதற்காக நிறுவனங்களை உருவாக்கிக் கொள்கின்றனர்.

பலர் கருதுவது போல் வளங்கள் இயற்கையின் இலவசக் கொடைகள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அது உண்மையல்ல. வளங்கள் என்பவை மனித நடவடிக்கைகளின் வேலைப்பாடாகும். மனிதர்கள் தாங்களாகவே வளங்களின் இன்றியமையாத பகுதிப் பொருட்கள் ஆவர். அவர்கள் நம் சுற்றுப்புறத்தில் கிடைக்கும் பொருட்களை வளங்களாக மாற்றி அவற்றை பயன்படுத்துகின்றனர். இவ்வளங்கள் பின்வரும் வழிகளில் வகைப்படுத்தலாம்–

(a) அவற்றின் தோன்றுதல் அடிப்படையில் – உயிருள்ள மற்றும் உயிரற்றவை
(b) தீர்ந்துவிடும் அடிப்படையில் – புதுப்பிக்கக் கூடியவை மற்றும் புதுப்பிக்க இயலாதவை
(c) உரிமையின் அடிப்படையில் – தனியார், சமூக, தேச மற்றும் சர்வதேசம்
(d) முன்னேற்ற தகுதியின் அடிப்படையில் – நிலையான, முன்னேற்றமடைந்த நிலுவை மற்றும் இருப்புகள்.



படம். 1.2: வளங்களின் வகைப்பாடு

Development of Resources

Resources are vital for human survival as well as for maintaining the quality of life. It was believed that resources are free gifts of nature. As a result, human beings used them indiscriminately and this has led to the following major problems.

- Depletion of resources for satisfying the greed of a few individuals.
- Accumulation of resources in few hands, which, in turn, divided the society into two segments i.e. haves and have nots or rich and poor.
- Indiscriminate exploitation of resources has led to global ecological crises such as, global warming, ozone layer depletion, environmental pollution and land degradation.

Activity

1. Imagine, if the oil supply gets exhausted one day, how would this affect our life style?
2. Plan a survey in your colony/village to investigate people's attitude towards recycling of the domestic/agricultural wastes. Ask questions about :
   (a) What do they think about resources they use?
   (b) What is their opinion about the wastes, and its utilisation?

An equitable distribution of resources has become essential for a sustained quality of life and global peace. If the present trend of resource depletion by a few individuals and countries continues, the future of our planet is in danger.

Therefore, resource planning is essential for sustainable existence of all forms of life. Sustainable existence is a component of **sustainable development.**

Sustainable development

Sustainable economic development means 'development should take place without damaging the environment, and development in the present should not compromise with the needs of the future generations.'

Rio de Janeiro Earth Summit, 1992

In June 1992, more than 100 heads of states met in Rio de Janeiro in Brazil, for the first International Earth Summit. The Summit was convened for addressing urgent problems of environmental protection and socio-economic development at the global level. The assembled leaders signed the Declaration on Global Climatic Change and Biological Diversity. The Rio Convention endorsed the global Forest Principles and adopted *Agenda 21* for achieving Sustainable Development in the 21st century.

Agenda 21

It is the declaration signed by world leaders in 1992 at the United Nations Conference on Environment and Development (UNCED), which took place at Rio de Janeiro, Brazil. It aims at achieving global sustainable development. It is an agenda to combat environmental damage, poverty, disease through global co-operation on common interests, mutual needs and shared responsibilities. One major objective of the Agenda 21 is that every local government should draw its own local Agenda 21.

Resource Planning

Planning is the widely accepted strategy for judicious use of resources. It has importance in a country like India, which has enormous diversity in the availability of resources. There are regions which are rich in certain types of resources but are deficient in some other resources.

வளங்களின் முன்னேற்றம்

மனிதன் உயிர்வாழ்வதற்கும் வாழ்க்கை தரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் வளங்கள் மிகவும் இன்றியமையாதவை. வளங்கள் இயற்கையின் இலவச நன்கொடை என நம்பப்படுகிறது. அதன் விளைவாக மனிதர்கள் அவற்றை பாகுபாடின்றி பயன்படுத்துகின்றனர். இதனால் இது கீழ்க்காணும் சிக்கல்களுக்கு வழிவகுக்கிறது.

- சில தனிநபர்களின் பேராசை நிறைவேற்றுவதால் வளப்பற்றாக்குறை ஏற்படுகிறது.
- சிலரின் கைகளிலேயே வளங்கள் குவிந்து விடுவதால் இருப்போர் மற்றும் இல்லாதோர் அல்லது செல்வந்தர்கள் மற்றும் ஏழைகள் என்று சமுதாயம் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது.
- வளங்கள் கண்மூடித்தனமாக சுரண்டப்படுவதால் உலக சூழ்நிலையியல் சிக்கல்களான உலக வெப்பமாதல், ஓசோன் அடுக்கு குறைபடுதல், சுற்றுப்புறம் மாசடைதல் மற்றும் நிலச்சீரழிவு ஆகியவற்றிற்கு வழிவகுக்கிறது.

செயல்

1. ஒருநாள் எண்ணெய் அளிப்பு தீர்ந்து விடுகிறது என்று ஊகித்துக் கொள். நம் வாழ்க்கை முறையில் இதன் விளைவு எவ்வாறு இருக்கும்?
2. உங்களுடைய குடியிருப்புப் பகுதி/கிராமத்தில் வீட்டு/வேளாண் கழிவுகளை மறுசுழற்சி செய்வதன் மீது மக்களின் மனப்பான்மையை ஆராயும் ஒரு கணக்கெடுப்பு நடத்த திட்டமிடு. இவற்றைக் குறித்த வினாக்களை கேட்கவும் :
   (a) அவர்கள் பயன்படுத்தும் வளங்கள் பற்றி அவர்கள் என்ன நினைக்கின்றனர்?
   (b) கழிவுகள் மற்றும் அவற்றின் பயன்பாட்டைப் பற்றி அவர்களின் கருத்து என்ன?

வாழ்வின் நிலையான முன்னேற்றத்திற்கும் உலக அமைதிக்கும் வளங்களை சம அளவில் பகிர்ந்தளித்தல் மிகவும் இன்றியமையாதது. சில தனி மனிதர்கள் மற்றும் நாடுகள் தற்போது உள்ள வளச் சீரழிவினைத் தொடர்ந்தால் நம் கோளின் எதிர்காலம் ஆபத்தினை சந்திக்கும்.

எனவே அனைத்து வடிவிலான வாழ்க்கையின் நீடித்த நிலைப்பாட்டிற்கு வளத் திட்டமிடுதல் இன்றியமையாத ஒன்றாகும். நீடித்த நிலைப்பாடு என்பது **நிலையான முன்னேற்றத்தின்** உட்கூறாகும்.

நிலையான முன்னேற்றம்

நிலையான பொருளாதார முன்னேற்றம் என்பதன் பொருள் 'முன்னேற்றமானது சுற்றுப்புறத்தை சீரழிக்காமல் ஏற்பட வேண்டும் மற்றும் தற்கால முன்னேற்றமானது எதிர்கால தலைமுறைகளின் தேவைகளுடன் சமரசமாக இருத்தல் கூடாது.'

ரியோ டி ஜெனிரோ உலக மாநாடு, 1992

1992 ல் 100 க்கும் அதிகமான நாடுகளின் தலைவர்கள் முதல் சர்வதேச உலக மாநாட்டிற்காக பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் கூடினர். இம்மாநாடு உலக அளவில் உள்ள அவசர தேவைகளான சுற்றுப்புற பாதுகாப்பு மற்றும் சமூக பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றை பற்றி உரையாடுவதற்காக கூட்டப்பட்டது. அங்கு கூடிய தலைவர்கள் உலக வானிலை மாற்றம் மற்றும் உயிர்ப்பன்மம் மீதான அறிக்கை மீது கையெழுத்திட்டனர். ரியோ மாநாடு உலக வன விதிகளுக்கு ஒப்புதல் அளித்து 21 ஆம் நூற்றாண்டில் நிலையான முன்னேற்றத்தை அடைவதற்கு திட்ட வரைவு 21 ஐ ஏற்றுக் கொண்டது.

திட்டவரைவு 21

இது பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் நடந்த சுற்றுப்புறம் மற்றும் முன்னேற்றத்தின் மீது ஐக்கிய நாடுகள் மாநாட்டில் (UNCED) 1992 ல் உலகத் தலைவர்களால் கையொப்பமிடப்பட்ட ஒரு அறிவிப்பு ஆகும். இது சுற்றுப்புற சீரழிவு, வறுமை, நோய் ஆகியவற்றை பொதுநலத்தின் மீது உலகளவிலான ஒத்துழைப்பு பரஸ்பர தேவைகள் மற்றும் பொறுப்புகள் போன்றவற்றை சமாளிப்பதற்கான ஒரு திட்ட வரைவாகும். திட்டவரைவு 21 ன் ஒரு முக்கிய நோக்கம் யாதெனில் ஒவ்வொரு தன்னாட்சி அரசாங்கமும் தனக்கான ஓர் உள்ளூர் திட்ட வரைவை வரைந்து கொள்ள வேண்டும்.

வள திட்டமிடல்

திட்டமிடல் என்பது வளங்களின் அறநெறி பயன்பாட்டிற்கு பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் உத்தியாகும். இது வளங்கள் கிடைத்தலில் அதிகளவு பன்மம் கொண்ட இந்தியா போன்ற நாடுகளுக்கு மிகவும் இன்றியமையாதது. சில வகையான வளங்கள் அதிகளவில் கிடைக்கும் பகுதிகள் உள்ளன. ஆனால் பிற வளங்கள் குறைந்து காணப்படும்.

There are some regions which can be considered self sufficient in terms of the availability of resources and there are some regions which have acute shortage of some vital resources. For example, the states of Jharkhand, Chhattisgarh and Madhya Pradesh are rich in minerals and coal deposits. Arunachal Pradesh has abundance of water resources but lacks in infrastructural development. The state of Rajasthan is very well endowed with solar and wind energy but lacks in water resources. The cold desert of Ladakh is relatively isolated from the rest of the country. It has very rich cultural heritage but it is deficient in water, infrastructure and some vital minerals. This calls for balanced resource planning at the national, state, regional and local levels.

Activity

Prepare a list of resources found in your state and also identify the resources that are important but deficit in your state.

Resource Planning in India

Resource planning is a complex process which involves : (i) identification and inventory of resources across the regions of the country. This involves surveying, mapping and qualitative and quantitative estimation and measurement of the resources. (ii) Evolving a planning structure endowed with appropriate technology, skill and institutional set up for implementing resource development plans. (iii) Matching the resource development plans with overall national development plans.

India has made concerted efforts for achieving the goals of resource planning right from the First Five Year Plan launched after Independence.

The availability of resources is a necessary condition for the development of any region, but mere availability of resources in the absence of corresponding changes in technology and institutions may hinder development. There are many regions in our country that are rich in resources but these are included in economically backward regions. On the contrary there are some regions which have a poor resource base but they are economically developed.

Find out

What resources are being developed in your surroundings by the community/village panchayats/ward level communities with the help of community participation?

Can you name some resource rich but economically backward regions and some resource poor but economically developed regions? Give reasons for such a situation.

The history of colonisation reveals that rich resources in colonies were the main attractions for the foreign invaders. It was primarily the higher level of technological development of the colonising countries that helped them to exploit resources of other regions and establish their supremacy over the colonies. Therefore, resources can contribute to development only when they are accompanied by appropriate technological development and institutional changes. India has experienced all this in different phases of colonisation. Therefore, in India, development, in general, and resource development in particular does not only involve the availability of resources, but also the technology, quality of human resources and the historical experiences of the people.

Conservation of Resources: Resources are vital for any developmental activity. But irrational consumption and over-utilisation of resources may lead to socio-economic and environmental problems. To overcome these problems, resource conservation at various levels is important. This had been the main concern of the leaders and thinkers in the past. For example, Gandhiji was very apt in voicing his concern about resource conservation in these words: "There is

AP SCERT

சில பகுதிகள் வளங்கள் கிடைப்பதில் தன்னிறைவு கொண்டவையாக உள்ளன. மேலும் சில பகுதிகளில் சில முக்கிய வளங்கள் கிடைப்பது மிகக் குறைவாக உள்ளன. எடுத்துக்காட்டாக ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் மற்றும் மத்தியப் பிரதேச மாநிலங்களில் தாதுப் பொருட்களும் நிலக்கரி படிவங்களும் வளமாக உள்ளன. அருணாச்சல பிரதேசத்தில் நீர் வளம் அதிகளவில் உள்ளது. ஆனால் கட்டுமான வசதிகள் முன்னேற்றமடையவில்லை. இராஜஸ்தான் மாநிலத்தில் சூரிய மற்றும் காற்று ஆற்றல் மிகவும் நன்றாக உள்ளது ஆனால் நீர் வளங்கள் இல்லை. லடாக்கின் குளிர் பாலைவனம் நாட்டின் பிற பகுதிகளிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு கலாச்சார பண்பாடு மிகவும் வளமாக உள்ளது. ஆனால் நீர், கட்டுமான வசதிகள் மற்றும் பிற முக்கிய தாதுக்கள் குறைவாக காணப்படுகின்றன. இவற்றின் காரணமாக தேசிய, மாநில மற்றும் உள்ளூர் நிலைகளில் சமநிலைப்படுத்தப்பட்ட வள திட்டமிடல் அவசியமாகிறது.

செயல்

உங்களுடைய மாநிலத்தில் காணப்படும் வளங்களின் பட்டியலைத் தயாரிக்கவும். உங்கள் மாநிலத்தில் குறைவாக காணப்படும் முக்கிய வளங்களைக் கண்டறியவும்.

இந்தியாவில் வள திட்டமிடல்

வள திட்டமிடல் என்பது ஒரு சிக்கலான செயல்முறை. இதில் கீழ்கண்டவை அடங்கியுள்ளன : (i) நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள வளங்களை அடையாளம் காணுதல் மற்றும் கண்டறிதல். இதில் கணக்கெடுப்பு, நிலப்படம் வரைதல், வளங்களின் அளவு மற்றும் தரக் கணிப்பு மற்றும் அளத்தல் ஆகியவை அடங்கியுள்ளன. (ii) வள முன்னேற்ற திட்டமிடலை நடைமுறைப்படுத்த தகுந்த தொழில்நுட்பம், திறன் மற்றும் நிறுவன அமைப்புடன் கூடிய திட்டமிடல் அமைப்பினை உருவாக்குதல். (iii) வள முன்னேற்ற திட்டங்களை ஒட்டுமொத்த தேசிய முன்னேற்ற திட்டங்களுடன் பொருத்துதல்.

இந்தியா அதன் விடுதலைக்குப் பின் அறிமுகப்படுத்திய முதல் ஐந்தாண்டு திட்ட காலத்திலிருந்தே வள திட்டமிடலின் இலக்குகளை அடைய ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொண்டது.

எந்த ஒரு பகுதியின் முன்னேற்றத்திற்கும் வளங்களின் கிடைத்தல் என்பது ஓர் அவசியமான நிலையாகும். ஆனால் வளங்களின் கிடைத்தல் மட்டுமே இருந்து தொழில்நுட்பம் மற்றும் நிறுவனங்களின் தொடர்பான மாற்றங்கள் இல்லாமலிருந்தால் அது முன்னேற்றத்தை தடுக்கும்.

கண்டறியவும்

உங்கள் சுற்றுப்புறங்களில் சமூக பங்களிப்பின் உதவியுடன் சமூக/கிராம பஞ்சாயத்துகள்/வார்டு நிலை சமூகங்களால் மேம்படுத்தப்பட்டு வரும் வளங்கள் யாவை?

நம் நாட்டின் பல பகுதிகளில் வளங்கள் அதிகளவில் இருப்பினும் அவை பொருளாதார அளவில் பின் தங்கிய பகுதிகளில் அடங்கியுள்ளன. இதற்கு முரணாக சில பகுதி குறைவான வள ஆதாரத்தை கொண்டுள்ளன. ஆனால் அவை பொருளாதார அளவில் முன்னேற்றமடைந்துள்ளன.

சில வளம் நிறைந்த ஆனால் பொருளாதார அளவில் பின்தங்கிய பகுதிகளையும் மற்றும் சில வளம் குன்றிய ஆனால் பொருளாதார அளவில் முன்னேற்றம் அடைந்த பகுதிகளை உங்களால் கூற இயலுமா? அதுபோன்ற சூழ்நிலைகளுக்கான காரணங்களைக் கூறவும்.

குடியேற்ற ஆட்சி வரலாறு நமக்கு தெரிவிப்பது யாதெனில் அயல்நாட்டுப் படையெடுப்பாளர்களை அதிக வளம் நிறைந்த குடியேற்றப் பகுதிகள் கவர்ந்தன. இது முதன்மையாக, குடியேற்ற நாடுகளின் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் உயரிய நிலை அவர்களுடைய வளங்களைச் சுரண்டுவதற்கு உதவியது. அதனால் குடியேற்றப் பகுதிகளில் தங்களின் மேலாண்மையை நிறுவினர். எனவே வளங்கள் தகுந்த தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் நிறுவன மாற்றங்களுடன் துணைநிற்கும் போது முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கும். இந்தியா குடியேற்றமாக்கப்பட்ட பல்வேறு நிலைகளில் இவையனைத்தையும் அனுபவித்தது. எனவே இந்தியாவில் பொதுவான முன்னேற்றம் மற்றும் வளப் பாதுகாப்பு ஆகியவை வளம் கிடைக்கப்பெறும் அளவை மட்டும் சார்ந்திருக்காமல் தொழில்நுட்பம், மனித வளத்தின் திறன் மற்றும் அங்குள்ள மக்களின் வரலாற்று அனுபவம் ஆகியவற்றையும் சார்ந்துள்ளது.

வளப் பாதுகாப்பு: எந்த ஒரு முன்னேற்றச் செயல்பாட்டிற்கும் வளங்கள் இன்றியமையாதவை. ஆனால் பகுத்தறிவற்ற நுகர்வு மற்றும் அளவுக்கு மீறிய பயன்பாடு ஆகியவை சமூக பொருளாதார மற்றும் சுற்றுப்புற சிக்கல்களுக்கு வழிவகுக்கும். இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண பல்வேறு நிலைகளில் வளப் பாதுகாப்பு இன்றியமையாதது. இதுவே கடந்த காலத்தில் தலைவர்கள் மற்றும் சிந்தனையாளர்களின் அக்கறையாக இருந்தது. எடுத்துக்காட்டாக காந்தியடிகள் இச்சொற்கள் வாயிலாக வளப் பாதுகாப்பு குறித்து தன்னுடைய அக்கறையான குரல் எழுப்புவதில் தகுந்து விளங்கினார்: "ஒவ்வொருவரின் தேவைக்கும் போதுமானதாக உள்ளது. எந்த ஒருவரின் பேராசைக்குமல்ல."

enough for everybody's need and not for any body's greed." He placed the greedy and selfish individuals and exploitative nature of modern technology as the root cause for resource depletion at the global level. He was against mass production and wanted to replace it with the production by the masses.

At the international level, the Club of Rome advocated resource conservation for the first time in a more systematic way in 1968. Subsequently, in 1974, Gandhian philosophy was once again presented by Schumacher in his book **Small is Beautiful**. The seminal contribution with respect to resource conservation at the global level was made by the Brundtland Commission Report, 1987. This report introduced the concept of 'Sustainable Development' and advocated it as a means for resource conservation, which was subsequently published in a book entitled **Our Common Future**. Another significant contribution was made at the Earth Summit at Rio de Janeiro, Brazil in 1992.

Land Resources

We live on land, we perform our economic activities on land and we use it in different ways. Thus, land is a natural resource of utmost importance. It supports natural vegetation, wild life, human life, economic activities, transport and communication systems. However, land is an asset of a finite magnitude, therefore, it is important to use the available land for various purposes with careful planning.



Fig 1.3: India : *Land under important Relief Features*

India has land under a variety of relief features, namely; mountains, plateaus, plains and islands. About 43 per cent of the land area is plain, which provides facilities for agriculture and industry. Mountains account for 30 per cent of the total surface area of the country and ensure perennial flow of some rivers, provide facilities for tourism and ecological aspects. About 27 per cent of the area of the country is the plateau region. It possesses rich reserves of minerals, fossil fuels and forests.

Land Utilisation

Land resources are used for the following purposes:

1. Forests
2. Land not available for cultivation
   (a) Barren and waste land
   (b) Land put to non-agricultural uses, e.g. buildings, roads, factories, etc.
3. Other uncultivated land (excluding fallow land)
   (a) Permanent pastures and grazing land,
   (b) Land under miscellaneous tree crops groves (not included in net sown area),
   (c) Cultruable waste land (left uncultivated for more than 5 agricultural years).
4. Fallow lands
   (a) Current fallow-(left without cultivation for one or less than one agricultural year),
   (b) Other than current fallow-(left uncultivated for the past 1 to 5 agricultural years).
5. Net sown area the physical extent of land on which crops are sown harvested is known as net sown area.

   Area sown more than once in an agricultural year plus net sown area is known as *gross cropped area*.

Land Use Pattern in India

The use of land is determined both by physical factors such as topography, climate, soil types as well as human factors such as population density, technological capability and culture and traditions etc.

பேராசையும் தன்னலமும் கொண்ட தனிநபர்கள் மற்றும் நவீன தொழில்நுட்பத்தினை தவறாக பயன்படுத்துவதே உலக அளவில் வளப் பற்றாக்குறைக்கு அடிப்படை காரணமாக உள்ளது என்று அவர் குறிப்பிடுகிறார். பெருமளவு உற்பத்தியை அவர் எதிர்க்கிறார். மாறாக பெரும்பாலானோரால் உற்பத்தி செய்யப்பட வேண்டுமென அவர் விரும்புகிறார்.

சர்வதேச அளவில் ரோமானியக் குழு 1968 ல் முதன் முறையாக வளப் பாதுகாப்பினை ஒரு மிகவும் ஒழுங்கான முறையில் செயல்படுத்த வேண்டுமென அறிவுறுத்தியது. அதன் பின்னர் 1974 ல் ஷுமேக்கர் தனது நூலான '**சிறியதே அழகானது**' என்னும் நூலில் காந்தியின் தத்துவத்தை மீண்டும் வழங்கினார். உலகளவில் வளப் பாதுகாப்பு தொடர்பான ஆரம்ப பங்களிப்பினை 1987 ல் வெளியான பிரண்ட்லாண்ட் குழு அறிக்கையால் செய்யப்பட்டது. இவ்வறிக்கை 'நிலையான முன்னேற்றம்' என்னும் கருத்துருவை அறிமுகப்படுத்தியது. இதுவே வளப்பாதுகாப்பிற்கான வழிமுறை என போதித்தது. இக்கருத்து **நம் பொது எதிர்காலம்** என்னும் தலைப்பில் வெளியிடப்பட்ட நூலில் குறிப்பிடப்பட்டது. இது குறித்த மற்றொரு பங்களிப்பு 1992 ல் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் நடந்த 'பூமி மாநாட்டில்' செய்யப்பட்டது.

நில வளங்கள்

நாம் நிலத்தின் மீது வாழ்கிறோம். நாம் நிலத்தின் மீது பொருளாதார செயல்பாடுகளை செய்கிறோம். மேலும் அதை நாம் பல்வேறு வழிகளில் பயன்படுத்துகிறோம். இவ்வாறு மிக முக்கிய இயற்கை வளமாக நிலம் உள்ளது. இது இயற்கைத் தாவரம், விலங்குச் செல்வம், மனித வாழ்க்கை, பொருளியல் செயற்பாடுகள், போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு முறைகள் ஆகியவற்றிற்கு உதவி அளிக்கிறது. எனினும் நிலம் என்பது நுண்ணிய வீச்சிலான சொத்தாக உள்ளது. எனவே நமக்கு கிடைத்துள்ள நிலத்தை மிகவும் எச்சரிக்கையுடன் பல்வேறு பயன்பாடுகளுக்காக நாம் பயன்படுத்துவது முக்கியமாகும். இந்தியாவில் பல்வேறு



*படம் **1.3:** இந்தியா : முக்கிய நிலத்தோற்றங்கள்*

நிலத்தோற்ற பண்புகளுடன் கூடிய நிலம் உள்ளது. அவை மலைகள், பீடபூமிகள், சமவெளிகள் மற்றும் தீவுகள். நிலத்தில் சுமார் 43 சதவீதம் வேளாண்மைக்கும், தொழிற்சாலைகளுக்கும் பயன்படும் சமவெளியாக உள்ளது. நாட்டின் மொத்த புறப்பரப்பில் 30 சதவீதம் மலைகள் உள்ளன. அவை சில வற்றாத நதிகளுக்கு பிறப்பிடமாகவும், சுற்றுலா மையங்களாகவும் சூழ்நிலையியல் கூறுகளையும் கொண்டுள்ளன. நாட்டின் பரப்பளவில் சுமார் 27 சதவீதம் பீடபூமி பகுதியாக உள்ளது. இதில் வளமான தாதுவளங்கள், படிம எரிபொருட்கள் மற்றும் காடுகள் அடங்கியுள்ளன.

நிலப் பயன்பாடு

நில வளங்கள் கீழ்காணும் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன:

1. காடுகள்
2. வேளாண்மைக்கு பயன்படாத காடுகள்
   (a) வெற்று அல்லது பயனற்ற நிலம்
   (b) வேளாண்சாரா பயன்பாடுகளுக்கு உட்படுத்தப்படும் நிலம். எ.கா: கட்டிடங்கள், சாலைகள், தொழிற்சாலைகள் ஆகியவை.
3. பிற சாகுபடி செய்யப்படாத நிலம் (தரிசு நிலங்களை தவிர்த்து)
   (a) நிலையான மேய்ச்சல் நிலங்கள்,
   (b) பலதரப்பட்ட மரப் பயிர்கள் தோட்டங்களின் கீழ் உள்ள நிலம் (நிகர விதைக்கப்பட்ட பரப்பில் சேராதது),
   (c) பயிர் செய்யத்தக்க வீண் நிலங்கள் (5 வேளாண் ஆண்டுகளுக்கு மேலாக பயிர் செய்யாமல் விடப்பட்ட நிலம்).
4. தரிசு நிலங்கள்
   (a) நடப்பு தரிசு நிலம் - (ஒன்று அல்லது அதற்கும் குறைவான வேளாண் ஆண்டு காலம் பயிரிடப்படாத நிலம்),
   (b) நடப்பு தரிசு நிலம் அல்லாத பிற நிலங்கள்- (கடந்த 1 முதல் 5 வேளாண் ஆண்டுகளாக பயிரிடப்படாத நிலம்).
5. நிகர விதைக்கப்பட்ட நிலம்: நிலத்தின் இயற்கையான பரப்பில் பயிர்கள் விதைக்கப்பட்டு அறுவடை செய்யப்பட்ட நிலம், நிகர விதைக்கப்பட்ட நிலம் என அழைக்கப்படும். ஒரு வேளாண் ஆண்டில் ஒருமுறைக்கு மேலாக விதைக்கப்பட்ட பரப்பினையும் நிகர விதைக்கப்பட்ட பரப்பினையும் சேர்த்து மொத்த பயிரிடப்பட்ட பரப்பு என்பர்.

இந்தியாவில் நில பயன்பாட்டு முறை

நிலப் பயன்பாடு இயற்கைக் காரணிகளான நிலவியல்பு, வானிலை, மண் வகைகள் அதேபோன்று மனிதக் காரணிகளான மக்கள்தொகை அடர்த்தி, தொழில்நுட்பத் திறன் மற்றும் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் போன்ற இருவகை காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது.



Source : Directorate of Economics and Statistics, Ministry of Agriculture, 2017

Fig. 1.4

Total geographical area of India is 3.28 million sq km. Land use data, however, is available only for 93 per cent of the total geographical area because the land use reporting for most of the north-east states except Assam has not been done fully. Moreover, some areas of Jammu and Kashmir occupied by Pakistan and China have also not been surveyed.

Activity

Try to do a comparison between the two pie charts (Fig. 1.4) given for land use and find out why the net sown area and the land under forests have changed from 1960-61 to 2014-15 very marginally.

The land under permanent pasture has also decreased. How are we able to feed our huge cattle population on this pasture land and what are the consequences of it? Most of the other than the current fallow lands are either of poor quality or the cost of cultivation of such land is very high. Hence, these lands are cultivated once or twice in about two to three years and if these are included in the net sown area then the percentage of NSA in India comes to about 54 per cent of the total reporting area.

The pattern of net sown area varies greatly from one state to another. It is over 80 per cent of the total area in Punjab and Haryana and less than 10 per cent in Arunachal Pradesh, Mizoram, Manipur and Andaman Nicobar Islands.

Find out reasons for the low proportion of net sown area in these states.

Forest area in the country is far lower than the desired 33 per cent of geographical area, as it was outlined in the National Forest Policy (1952). It was considered essential for maintenance of the ecological balance. The livelihood of millions of people who live on

பொதுவான நிலப்பயன்பாட்டு வகைகள் 1960-61 **பொதுவான நிலப்பயன்பாட்டு வகைகள் 2014-15**

அறிக்கை பரப்பளவு: *100* சதவீதம்



ஆதாரம் : பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் இயக்குநரகம், வேளாண் அமைச்சகம், *2017*

*படம். **1.4***

இந்தியாவின் மொத்த புவியியல் பரப்பு 3.28 மில்லியன் சதுர கி.மீ. எனினும் மொத்த புவியியல் பரப்பில் 93 சதவீத நிலப் பயன்பாட்டுப் புள்ளி விவரம் மட்டுமே நமக்கு கிடைத்துள்ளது. ஏனெனில் பெரும்பாலான வடகிழக்கு மாநிலங்களின் அஸ்ஸாமைத் தவிர நிலப் பயன்பாட்டு அறிக்கை முழுமையாகச் செய்யப்படவில்லை. மேலும் பாகிஸ்தான் மற்றும் சீனாவால் கைப்பற்றப்பட்ட ஜம்மு காஷ்மீரின் சில பகுதிகளில் கூட கணக்கெடுப்பு செய்யவில்லை.

செயல்

நிலப் பயன்பாட்டிற்காக தரப்பட்டுள்ள இவ்விரண்டு வட்ட வரைபடங்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கண்டறியவும் (படம்.1.4) நிகர விதைக்கப்பட்ட பரப்பும் காடுகளின் கீழ் உள்ள நிலமும் 1960-61 லிருந்து 2014-15 வரை மிகவும் இறுதிநிலையுடன் மாற்றமடைந்துள்ளது ஏன் என்பதைக் கண்டறியவும்.

நிலையான பசுமையின் கீழ் உள்ள நிலமும் குறைந்துள்ளது. இப்பசுமை நிலத்தில் எவ்வாறு நம் விலங்குச் செல்வங்களுக்கு உணவு வழங்க இயலும்? அதன் விளைவுகள் என்ன? பெரும்பாலான பிற நடப்பு தரிசு நிலங்கள் குறைந்த தரத்தைக் கொண்டிருக்கின்றன அல்லது அதுபோன்ற சாகுபடி செய்வதற்கான விலை மிக அதிகமாக உள்ளது. எனவே இந்நிலங்கள் சுமார் 2 அல்லது 3 ஆண்டுகளில் ஒன்று அல்லது இரண்டு முறை சாகுபடி செய்யப்படுகின்றன. இவை நிகர விதைக்கப்பட்ட பரப்பின் கீழ் சேர்க்கப்பட்டால், பின்னர் நிகர விதைக்கப்பட்ட பரப்பின் கீழ் இந்தியாவில் மொத்த அறிக்கை பரப்பில் சுமார் 54 சதவீதம் வருகின்றன.

நிகர விதைக்கப்பட்ட பரப்பின் வடிவமைப்பு முறை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மிகவும் மாறுபட்டுள்ளது. இது மொத்த பரப்பில் பஞ்சாப் மற்றும் ஹரியானாவில் 80 சதவீதமாகவும், அருணாச்சலப் பிரதேசம், மிசோரம், மணிப்பூர் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் 10 சதவீதத்தை விட குறைவாகவும் உள்ளது.

இம்மாநிலங்களில் நிகர விதைக்கப்பட்ட நிலத்தின் குறைந்த விகிதத்திற்கான காரணங்களை கண்டறியவும்.

நாட்டின் காட்டுப்பகுதி புவியியல் பரப்பில் நாம் விரும்பும் 33 சதவீதத்தை விட மிகவும் குறைவாக உள்ளது. இது தேசிய காட்டுக் கொள்கை (1952) யில் கணிக்கப்பட்டதாகும். இது சூழ்நிலையியல் சமநிலையை நிர்வகிப்பதற்கு மிகவும் இன்றியமையாததாகக் கருதப்படுகிறது. காடுகளின் விளிம்புகளின் மீது வாழும் மில்லியன் கணக்கான

the fringes of these forests depends upon it. A part of the land is termed as waste land and land put to other non-agricultural uses. Waste land includes rocky, arid and desert areas and land put to other non-agricultural uses includes settlements, roads, railways, industry etc. Continuous use of land over a long period of time without taking appropriate measures to conserve and manage it, has resulted in land degradation. This, in turn, has serious repercussions on society and the environment.

Land Degradation and Conservation Measures

We have shared our land with the past generations and will have to do so with the future generations too. Ninety-five per cent of our basic needs for food, shelter and clothing are obtained from land. Human activities have not only brought about degradation of land but have also aggravated the pace of natural forces to cause damage to land.

Some human activities such as deforestation, over grazing, mining and quarrying too have contributed significantly in land degradation.

Mining sites are abandoned after excavation work is complete leaving deep scars and traces of over-burdening. In states like Jharkhand, Chhattisgarh, Madhya Pradesh and Odisha deforestation due to mining have caused severe land degradation. In states like Gujarat, Rajasthan, Madhya Pradesh and Maharashtra overgrazing is one of the main reasons for land degradation. In the states of Punjab, Haryana, western Uttar Pradesh, over irrigation is responsible for land degradation due to water logging leading to increase in salinity and alkalinity in the soil. The mineral processing like grinding of limestone for cement industry and calcite and soapstone for ceramic industry generate huge quantity of dust in the atmosphere. It retards the process of infiltration of water into the soil after it settles down on the land. In recent years, industrial effluents as waste have become a major source of land and water pollution in many parts of the country.

There are many ways to solve the problems of land degradation. Afforestation and proper management of grazing can help to some extent. Planting of shelter belts of plants, control on over grazing, stabilisation of sand dunes by growing thorny bushes are some of the methods to check land degradation in arid areas. Proper management of waste lands, control of mining activities, proper discharge and disposal of industrial effluents and wastes after treatment can reduce land and water degradation in industrial and suburban areas.

Soil as a Resource

Soil is the most important renewable natural resource. It is the medium of plant growth and supports different types of living organisms on the earth. The soil is a living system. It takes millions of years to form soil upto a few cm in depth. Relief, parent rock or bed rock, climate, vegetation and other forms of life and time are important factors in the formation of soil. Various forces of nature such as change in temperature, actions of running water, wind and glaciers, activities of decomposers etc. contribute to the formation of soil. Chemical and organic changes which take place in the soil are equally important. Soil also consists



Fig. 1.5: *Soil Profile*

மக்களின் வாழ்வாதாரம் காடுகளின் மீது ஆதாரப்பட்டுள்ளது. நிலத்தின் ஒரு பகுதி வீண் நிலம் என்று அழைக்கப்பட்டு வேளாண் சாரா பயன்பாடுகளுக்கு அதைப் பயன்படுத்துவர். வீண் நிலத்தில் பாறைப்பாங்கான, வறண்ட மற்றும் பாலைவனப் பகுதிகள் அடங்கும். வேளாண்சாரா பயன்பாடுகளுக்கு பயன்படுத்தப்படும் நிலத்தில் குடியிருப்புகள் சாலைகள், இரயில் வழிகள், தொழிற்சாலை போன்றவை அடங்கும். நிலத்தை பாதுகாக்கவும் நிர்வகிக்கவும் தகுந்த நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்து நீண்ட காலமாக நிலத்தை பயன்படுத்துவதால் நிலச் சீரழிவு ஏற்படும். இதனால் சமுதாயத்தின் மீதும் சுற்றுப்புறத்தின் மீதும் தீவிரமான பின்விளைவுகள் ஏற்படும்.

நிலச் சீரழிவும் பாதுகாப்பு நடவடிக்கைகளும்

நாம் நிலத்தை கடந்த தலைமுறையினருடன் பகிர்ந்து கொண்டோம். அதேபோல் எதிர்காலத் தலைமுறையினருடனும் பகிர்ந்துகொள்ள வேண்டும். உணவு, குடியிருப்பு மற்றும் ஆடை போன்ற அடிப்படை தேவைகளில் 95 சதவீதம் நிலத்திலிருந்து பெறுகிறோம். மனிதச் செயற்பாடுகள் நிலச் சீரழிவை மட்டுமின்றி இயற்கை சக்திகளின் வேகத்தையும் துரிதப்படுத்தின.

சில மனிதச் செயற்பாடுகளான காடுகள் அழிப்பு, அளவுக்கதிகமான மேய்ச்சல், சுரங்கத் தொழில் மற்றும் கல் குவாரி போன்றவையும் குறிப்பாக நிலச் சீரழிவிற்குத் துணைபுரிகின்றன.

சுரங்கம் தோண்டுமிடங்கள் அகழ்வுப் பணி நிறைவடைந்த பின் முழுமையான ஆழ்ந்த வடுக்களையும் அதிகச் சுமையின் தடயங்களையும் விட்டுச் சென்றதால் அவ்விடங்கள் கைவிடப்பட்டன. ஜார்கண்ட், சத்தீஷ்கர், மத்தியப் பிரதேசம் மற்றும் ஒடிசா போன்ற மாநிலங்களின் காடழிப்பு, சுரங்கத் தொழில் மேற்கொண்டதால் தீவிரமான நிலச் சீரழிவினை ஏற்படுத்தின. குஜராத், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் நிலச் சீரழிவிற்கான காரணம் அங்கு அளவுக்கதிகமான மேய்ச்சல் மேற்கொள்ளப்பட்டதே ஆகும். பஞ்சாப், ஹரியானா, மேற்கு உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் அளவுக்கதிகமான நீர்ப்பாசனத்தினால் நீர் தட்டுப்பாடு ஏற்பட்டு மண்ணில் உப்புத்தன்மை மற்றும் காரத்தன்மை அதிகரித்து நிலச்சீரழிவிற்கு வழிவகுத்தது. கனிமச் செல்வச் செயல்முறை போன்ற சிமெண்ட் தொழிற்சாலைக்கு சுண்ணாம்புக் கல்லை அரைத்தல் பீங்கான் தொழிலுக்குத் தேவையான கால்சைட் மற்றும் சோப்புக்கல் போன்றவற்றை பதப்படுத்தும் தொழிலில் அதிக அளவில் வளிமண்டலத்தில் தூசுகளை உருவாக்குகிறது. இது நிலத்தின் மீது படிவதால் மண்ணில் நீர் வடிகட்டப்படும் செயல்முறையை தடுக்கிறது. அண்மைக்கால ஆண்டுகளில் தொழிற்சாலைக் கசிவுகளான கழிவுகள் நிலம் மற்றும் நீர் மாசடைவதற்கு நாட்டிலுள்ள பல பாகங்களில் முக்கிய வளங்களாக மாறியுள்ளன.

நிலச் சீரழிவுப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பல வழிமுறைகள் உள்ளன. காடு வளர்ப்பு மற்றும் மேய்ச்சலில் தகுந்த நிர்வாகம் ஆகியவை ஓரளவிற்கு நிலச் சீரழிவைத் தடுக்க உதவும். தாவரங்களின் குடியிருப்பு வளையங்களை நடுதல், அளவுக்கதிகமான மேய்ச்சலை கட்டுப்படுத்துதல், மணற்குன்றுகளை உறுதிப்படுத்த முட்புதர்களை வளர்த்தல் போன்ற சில முறைகள் வறண்ட பகுதிகளில் நிலச் சீரழிவினை தடுக்கும். தொழிற்சாலை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் தொழிற்சாலை கசிவுகள் மற்றும் கழிவு தகுந்த முறையில் வெளியேற்றுதல் வீண் நிலங்களை தகுந்த முறையில் நிர்வகித்தல் சுரங்கச் செயற்பாடுகளை கட்டுப்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் நிலம் மற்றும் நீர் சீரழிவுகளை குறைக்கின்றன.

மண்வளம்

மண் என்பது மிகவும் முக்கியமான புதுப்பிக்கக் கூடிய இயற்கை வளமாகும். இது தாவர வளர்ச்சிக்கு முக்கிய ஊடகமாகவும், பூமியின் மீதுள்ள பல்வேறு வகையான வாழும் உயிர்களுக்கு ஆதரவளிப்பதாகவும் உள்ளது. மண் என்பது ஓர் உயிரோட்டமான அமைப்பாகும். பூமியில் சில செ.மீ. ஆழமளவிற்கு மண் உருவாவதற்கு மில்லியன் கணக்கான ஆண்டுகள் ஆகின்றன. நிலத்தோற்றம் மூலப்பாறை அல்லது படுதளப்பாறை காலநிலை, தாவரம் மற்றும் பிற உயிர் வடிவங்கள் மற்றும் காலம் ஆகியவை மண் உருவாவதற்கான முக்கிய காரணிகளாகும். பல்வேறு இயற்கை சக்திகளான வெப்பநிலை மாற்றம் ஓடும் நீரின் செயல்கள், காற்றுகளும் பனிப்பாறைகளும் சிதைப்பான்களின் செயற்பாடுகள் ஆகியவையும் மண் உருவாவதில் துணைபுரிகின்றன. மண்ணில் ஏற்படும் வேதி மற்றும்அங்கக மாற்றங்கள் போன்றவையும் இதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. மண்ணில் அங்கக

படம். 1.5: மண்ணின் தன்மை

of organic (humus) and inorganic materials (Fig. 1.5).

On the basis of the factors responsible for soil formation, colour, thickness, texture, age, chemical and physical properties, the soils of India are classified in different types.

Classification of Soils

India has varied relief features, landforms, climatic realms and vegetation types. These have contributed in the development of various types of soils.

Alluvial Soils

This is the most widely spread and important soil. In fact, the entire northern plains are made of alluvial soil. These have been deposited by three important Himalayan river systems– the Indus, the Ganga and the Brahmaputra. These soils also extend in Rajasthan and Gujarat through a narrow corridor. Alluvial soil is also found in the eastern coastal plains particularly in the deltas of the Mahanadi, the Godavari, the Krishna and the Kaveri rivers.



Fig. 1.6: *Alluvial Soil*

The alluvial soil consists of various proportions of sand, silt and clay. As we move inlands towards the river valleys, soil particles appear some what bigger in size. In the upper reaches of the river valley i.e. near the place of the break of slope, the soils are coarse. Such soils are more common in piedmont plains such as **Duars, Chos** and **Terai**.

Apart from the size of their grains or components, soils are also described on the basis of their age. According to their age alluvial soils can be classified as old alluvial (**Bangar**) and new alluvial (**Khadar**). The **bangar** soil has higher concentration of *kanker* nodules than the **Khadar.** It has more fine particles and is more fertile than the **bangar**.

Alluvial soils as a whole are very fertile. Mostly these soils contain adequate proportion of potash, phosphoric acid and lime which are ideal for the growth of sugarcane, paddy, wheat and other cereal and pulse crops. Due to its high fertility, regions of alluvial soils are intensively cultivated and densely populated. Soils in the drier areas are more alkaline and can be productive after proper treatment and irrigation.

Black Soil

These soils are black in colour and are also known as *regur* soils. Black soil is ideal for growing cotton and is also known as *black cotton soil*. It is believed that climatic condition along with the parent rock material are the important factors for the formation of black soil. This type of soil is typical of the Deccan trap (*Basalt*) region spread over northwest Deccan plateau and is made up of lava flows. They cover the plateaus of Maharashtra, Saurashtra, Malwa, Madhya Pradesh and Chhattisgarh and extend in the south east direction along the Godavari and the Krishna valleys.

The black soils are made up of extremely fine i.e. clayey material. They are well-known for their capacity to hold moisture. In addition, they are rich in soil nutrients, such as calcium carbonate, magnesium, potash and lime. These soils are generally poor in phosphoric contents. They develop deep cracks during hot weather, which helps in the proper aeration of the soil.

Fig. 1.7: *Black Soil*

மற்றும் அனங்கக பொருட்களும் அடங்கியுள்ளன(படம். 1.5).

மண் உருவாவதற்கான காரணிகளின் அடிப்படையிலும் அதன் நிறம், பருமன், அமைப்பு, காலம், வேதி மற்றும் இயற்பியல் பண்புகளை கொண்டும் இந்திய மண்கள் பல்வேறு வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மண்களின் வகைப்பாடு

இந்தியா பல்வேறு நிலப்பண்புகள், நிலத்தோற்றங்கள், காலநிலை அடுக்குகள் மற்றும் தாவர வகைகளை கொண்டுள்ளன. இவை பல்வேறு வகையான மண்களின் வளர்ச்சியில் துணைபுரிகின்றன.

வண்டல் மண்கள்

இது மிகவும் அதிகமாக பரவியுள்ள முக்கிய மண்ணாகும். உண்மையில் வடக்குச் சமவெளிகள் முழுவதும் வண்டல் மண்ணாலானவை. இவை இமயமலையின் மூன்று முக்கியமான நதி அமைப்புகளால் படிவு செய்யப்பட்டுள்ளன. அவை சிந்து, கங்கை மற்றும் பிரம்மபுத்திரா. இவை ஒரு குறுகிய பாதை வழியாக இராஜஸ்தானிலும் குஜராத்திலும் பரவியுள்ளன. வண்டல் மண்கள் கிழக்கு கடலோரச் சமவெளிகளிலும் குறிப்பாக மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா மற்றும் காவேரி டெல்டாக்களில் காணப்படுகின்றன.



படம். 1.6: வண்டல் மண்

வண்டல் மண்ணானது மணல், வண்டல் மற்றும் களிமண் போன்ற பல்வேறு விகிதங்களைக் கொண்டுள்ளது. உள்நிலங்களை நாம் நதிப்பள்ளத்தாக்குகளை நோக்கி நகர்த்தினால் மண் துகள்கள் பெரிய அளவில் தோன்றும். நதிப் பள்ளத்தாக்கின் மேல் அடைவுகளில் அதாவது சரிவின் முடிவிடத்திற்கு அருகில் மண்கள் கரடுமுரடாக இருக்கும். துவார்ஸ், சோஸ் மற்றும் தெராய் போன்ற வண்டல் மண் சமவெளிகளில் இத்தகைய மண் மிகவும் சாதாரணமாகக் காணப்படும்.

அவற்றின் செதுக்கப்பட்ட மணற்கற்கள் அல்லது உட்கூறுகளின் அளவைத் தவிர மண்கள் அவற்றின் காலத்தின் அடிப்படையிலும் விவரிக்கப்படுகிறது. அவற்றின் வயதிற்கேற்ப வண்டல் மண்ணை பழைய வண்டல் (**பங்கர்**) மற்றும் புதிய வண்டல் (**காதர்**) என வகைப்படுத்தலாம். **பங்கர்** மண்ணில் **காதர்** முடிச்சுகளைவிட கன்கர் எனப்படும் கால்சியம் கார்பனேட் இங்கு அதிகம். இது அதிக நுண்ணிய துகள்களைக் கொண்டுள்ளது. இது **பங்கர்** மண்ணை விட மிகவும் வளமானது.

மொத்தத்தில் வண்டல் மண் மிகவும் வளமானது. இந்த மண்ணில் கரும்பு, நெல், கோதுமை மற்றும் பிற தானிய மற்றும் பருப்பு பயிர்களின் வளர்ச்சிக்கு ஏற்ற பொட்டாஷ், பாஸ்பாரிக் அமிலம் மற்றும் சுண்ணாம்பு போன்றவற்றின் அளவு போதுமான அளவில் உள்ளது. அதன் அதிக வளம் காரணமாக வண்டல் மண் பகுதிகளில் தீவிரமாக பயிரிடப்பட்டு அடர்த்தியான மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. வறண்ட பகுதிகளில் உள்ள மண் அதிகக் காரத்தன்மை கொண்டது மற்றும் தகுந்த முறையில் சரிசெய்தல் மற்றும் நீர்ப்பாசனம் செய்தால் உற்பத்திக்கு ஏற்றதாக இருக்கும்.

கரிசல் மண்

இம்மண் கருப்பு நிறத்தில் இருக்கும். இதை கரிசல் மண் என்றும் அழைப்பர். இம்மண் பருத்தியை வளர்ப்பதற்கு ஏற்றது என்பதால் இதை கருப்பு பருத்தி மண் என்றும் அழைப்பர். கருப்பு மண் உருவாவதற்கு மூலப்பாறைப் பொருட்களுடன் கூடிய காலநிலை முக்கிய காரணிகள் என நம்பப்படுகிறது. இந்த வகை மண் தக்கான பீடபூமியில் பரவியுள்ள தக்கானப் (பசால்ட்) பகுதியின் சிறப்பியல்பு மண் மற்றும் எரிதிரவப் பாய்தல்களால் ஆனது. அவை மகாராஷ்டிரா, சௌராஷ்டிரா, மாளவா, மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஷ்கர் ஆகிய மாநிலங்களின் பீடபூமிகளை உள்ளடக்கியது மற்றும் கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிப் பள்ளத்தாக்குகளின் வழியாக தென்கிழக்கு திசையில் பரவியுள்ளது.

கரிசல் மண் மிக நுண்ணிய களிமண் பொருட்களால் ஆனது. அவை ஈரப்பதத்தைத் தக்கவைப்பதில் புகழ்பெற்றவை. மேலும் கால்சியம் கார்பனேட், மெக்னீசியம், பொட்டாஷ் மற்றும்

படம். 1.7: கரிசல் மண்

சுண்ணாம்பு போன்ற மண் சத்துகள் நிறைந்துள்ளன. இவை மண்ணில் பொதுவாக பாஸ்பாரிக் உட்கூறுகள் குறைவாக இருக்கும். அவை வெப்பமான காலநிலையின் போது ஆழமான வெடிப்புகளை ஏற்படுத்தும். இது மண்ணின் தகுந்த காற்றோட்டத்திற்கு துணைபுரியும்.



(iii) Here are some false statements. Identify the mistakes and rewrite them correctly.

(a) Multiplying urban centres with large and dense populations and urban lifestyles have helped in proper utilisation of water resources.

(b) Regulating and damming of rivers does not affect the river's natural flow and its sediment flow.

(c) Today in Rajasthan, the practice of rooftop rainwater water harvesting has gained popularity despite high water availability due to the Indira Gandhi Canal.

2. Answer the following questions in about 30 words.

(i) Explain how water becomes a renewable resource.

(ii) What is water scarcity and what are its main causes?

(iii) Compare the advantages and disadvantages of multi-purpose river projects.

3. Answer the following questions in about 120 words.

(i) Discuss how rainwater harvesting in semi-arid regions of Rajasthan is carried out.

(ii) Describe how modern adaptations of traditional rainwater harvesting methods are being carried out to conserve and store water.

பயிற்சிகள் பயிற்சிகள் பயிற்சிகள் பயிற்சிகள் பயிற்சிகள்

1. கொள்குறி வினாக்கள்

(i) கீழே தரப்பட்டுள்ள தகவலின் அடிப்படையில் ஒவ்வொரு சூழ்நிலையையும் 'நீர் பற்றாக் குறையால் பாதிக்கப்படுபவர்கள்' அல்லது 'நீர் பற்றாக்குறையால் பாதிக்கப்படாதவர்' என வகைப்படுத்தவும்.

(a) அதிக ஆண்டு மழைபொழிவும் கொண்ட பகுதி

(b) அதிக ஆண்டு மழைபொழிவும் அதிக மக்கள் தொகையும் கொண்ட பகுதி

(c) அதிக ஆண்டு மழைபொழிவை கொண்ட பகுதி, ஆனால் நீரானது அதிக அளவில் மாசடைந்த பகுதி.

(d) குறைந்த ஆண்டு மழைபொழிவும் குறைந்த மக்கள் தொகையும் கொண்ட பகுதி

(ii) பின்வரும் கூற்றுகளில் எது பல்நோக்கு அணைத் திட்டங்களுக்கு சாதகமான கூற்று இல்லை?

(a) பல்நோக்கு அணைத்திட்டங்கள் நீர்பற்றாக்குறையாக உள்ள பகுதிகளுக்கு நீரைக் கொண்டு வருகின்றன.

(b) பல்நோக்கு அணைத்திட்டங்கள் நீர் பாய்வதை சீர்படுத்தி வெள்ளங்களைக் கட்டுப்படுத்த உதவுகின்றன.

(c) பல்நோக்கு அணைத்திட்டங்கள் பேரளவிலான இடப்பெயர்வுகளுக்கும் வாழ்வாதார இழப்பிற்கும் வழிவகுக்கின்றன.

(d) பல்நோக்கு அணைத்திட்டங்கள் நம் தொழிற்சாலைகளுக்கும் வீடுகளுக்கும் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன.

(iii) இங்கு சில தவறான கூற்றுகள் உள்ளன. தவறுகளைக் கண்டறிந்து அவற்றை சரிப்படுத்தி எழுதவும்.

(a) பெரிய மற்றும் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட மையங்களைப் பெருக்குவது மற்றும் நகர்ப்புற வாழ்க்கை முறைகள் ஆகியவை நீர் வளங்களை சரியான முறையில் பயன்படுத்த உதவுகிறது.

(b) நதிகளை சீர்படுத்துதல் மற்றும் அணைகளைக் கட்டுதல் ஆகியவை ஆற்றின் இயல்பான ஓட்டத்தையும் அதன் வண்டல் படிவு ஓட்டத்தையும் பாதிக்காது.

(c) தற்போது இராஜஸ்தானில் இந்திரா காந்தி கால்வாயின் காரணமாக அதிக நீர் இருப்பு இருந்தபோதிலும் மேற்கூரை மழைநீர் சேகரிப்பு முறை பிரபலமடைந்துள்ளது.

2. பின்வரும் வினாக்களுக்கு சுமார் 30 சொற்களில் விடையளிக்கவும்.

(i) நீர் எவ்வாறு புதுப்பிக்கக் கூடிய வளமாக மாறுகிறது என்பதை விளக்குக.

(ii) நீர் பற்றாக்குறை என்றால் என்ன? அதன் முக்கிய காரணங்கள் யாவை?

(iii) பல்நோக்கு நதி திட்டங்களின் நன்மைகள் மற்றும் தீமைகளை ஒப்பிடுக.

3. பின்வரும் வினாக்களுக்கு சுமார் 120 சொற்களில் விடையளிக்கவும்.

(i) இராஜஸ்தானின் குறைவாக வறண்ட பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பதைப் பற்றி கலந்துரையாடவும்.

(ii) நீரைப் பாதுகாப்பதற்கும் சேமிப்பதற்கும் பாரம்பரிய மழைநீர் சேகரிப்பு முறைகளின் நவீன தழுவல்கள் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என்பதை விவரிக்கவும்.

AGRICULTURE 4

India is an agriculturally important country. Two-thirds of its population is engaged in agricultural activities. Agriculture is a primary activity, which produces most of the food that we consume. Besides food grains, it also produces raw material for various industries.

Can you name some industries based on agricultural raw material?

Moreover, some agricultural products like tea, coffee, spices, etc. are also exported.

Types of Farming

Agriculture is an age-old economic activity in our country. Over these years, cultivation methods have changed significantly depending upon the characteristics of physical environment, technological know-how and socio-cultural practices. Farming varies from subsistence to commercial type. At present, in different parts of India, the following farming systems are practised.

Primitive Subsistence Farming

This type of farming is still practised in few pockets of India. Primitive subsistence agriculture is practised on small patches of land with the help of primitive tools like hoe, dao and digging sticks, and family/community labour. This type of farming depends upon monsoon, natural fertility of the soil and suitability of other environmental conditions to the crops grown.

It is a 'slash and burn' agriculture. Farmers clear a patch of land and produce cereals and other food crops to sustain their family. When the soil fertility decreases, the farmers shift and clear a fresh patch of land for cultivation. This type of shifting allows Nature to replenish the fertility of the soil through natural processes; land productivity in this type of agriculture is low as the farmer does not use fertilisers or other modern inputs. It is known by different names in different parts of the country.

Can you name some such types of farmings?

It is *jhumming* in north-eastern states like Assam, Meghalaya, Mizoram and Nagaland; Pamlou in Manipur, Dipa in Bastar district of Chhattishgarh, and in Andaman and Nicobar Islands.

Jhumming: The 'slash and burn' agriculture is known as 'Milpa' in Mexico and Central America, 'Conuco' in Venzuela, 'Roca' in Brazil, 'Masole' in Central Africa, 'Ladang' in Indonesia, 'Ray' in Vietnam.

In India, this primitive form of cultivation is called 'Bewar' or 'Dahiya' in Madhya Pradesh, 'Podu' or 'Penda' in Andhra Pradesh, 'Pama Dabi' or 'Koman' or Bringa' in Odisha, 'Kumari' in Western Ghats, 'Valre' or 'Waltre' in South-eastern Rajasthan, 'Khil' in the Himalayan belt, 'Kuruwa' in Jharkhand, and 'Jhumming' in the North-eastern region.

Fig. 4.1

விவசாயம் 4

இந்தியா விவசாய முக்கியத்துவம் வாய்ந்த நாடு. அதன் மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. விவசாயம், நாம் உட்கொள்ளும் பெரும்பாலான உணவினை உற்பத்தி செய்யும் முதன்மையான நடவடிக்கையாகும். உணவு தானியங்களுடன் பல்வேறு தொழில்களுக்கான மூலப்பொருட்களையும் உற்பத்தி செய்கிறது.

விவசாய மூலப்பொருளின் அடிப்படையில் சில தொழில்களுக்கு பெயரிட முடியுமா?

மேலும் சில விவசாயப் பொருட்களான தேநீர், காப்பி, மசாலாப் பொருட்கள் போன்றவையும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. --

விவசாயத்தின் வகைகள்

நம் நாட்டில் விவசாயம் என்பது ஒரு பழமையான பொருளாதார நடவடிக்கை. இந்த ஆண்டுகளில் இயற்பியல் சூழல், தொழில்நுட்ப அறிவு மற்றும் சமூக கலாச்சார நடைமுறைகளின் பண்புகள் ஆகியவற்றைப் பொறுத்து சாகுபடி முறைகள் கணிசமாக மாறியுள்ளன. விவசாயம் வாழ்வாதாரத்திலிருந்து வணிக வகைக்கு மாறுபடும். தற்போது இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பின்வரும் விவசாய முறைகள் நடைமுறையில் உள்ளன.

பழமையான வாழ்வாதார விவசாயம்

இவ்வகை விவசாயம் இந்தியாவின் சில பகுதிகளில் இன்னும் நடைமுறையில் உள்ளது. பழமையான வாழ்வாதார விவசாயமானது மண்வெட்டி, தாவோ மற்றும் தோண்டும் குச்சிகள் மற்றும் குடும்பம்/சமூக உழைப்பு போன்ற பழமையான கருவிகள் உதவியுடன் சிறிய நிலங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இவ்வகை விவசாயம் பருவமழை, மண்ணின் இயற்கை வளம், வளரும் பயிர்களுக்கு பொருத்தமான சில சுற்றுச்சூழல் நிலைகள் ஆகியவற்றின் மீது ஆதாரப்பட்டுள்ளது.

இது ‘வெட்டி எரிக்கும்’ விவசாயமாகும். விவசாயிகள் நிலத்தின் ஒரு பகுதியை தூய்மை செய்து தானியங்கள் மற்றும் பிற உணவுப் பயிர்களை உற்பத்தி செய்வர். மண்வளம் குறையும் போது விவசாயிகள் பயிர் செய்வதற்கு வேறு புதிய நிலத்தின் ஒரு பகுதியை தூய்மை செய்து அங்கு இடத்தை மாற்றிக் கொள்வர். இவ்வகையான இடமாற்றம் மண்ணின் வளத்தை மீள்நிரப்பு செய்ய இயற்கையை அனுமதிக்கிறது; இது இயற்கைச் செயல்முறைகள் மூலம் நடைபெறுகிறது. இவ்வகை விவசாயத்தில் விவசாயி உரங்கள் அல்லது பிற நவீன உள்ளீடுகளை பயன்படுத்தாததால் நிலத்தின் உற்பத்தித் திறன் குறைவாகவே இருக்கும். இது நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது.

அத்தகைய சில வகையான விவசாயங்களின் பெயர்களை உங்களால் கூற இயலுமா?

இது அஸ்ஸாம், மேகாலயா, மிசோராம் மற்றும் நாகாலாந்து போன்ற வடகிழக்கு மாநிலங்களில் ஜூம்மிங் என்று அழைக்கப்படுகிறது. மணிப்பூரில் பாம்லெள என்றும், சத்தீஷ்கரின் பஸ்தார் மாவட்டத்திலும், அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளில் ‘திபா’ என்றும் அழைக்கப்படுகிறது.

ஜூம்மிங்: ‘வெட்டி எரிக்கும்’ விவசாயத்தை மெக்சிகோவிலும், மத்திய அமெரிக்காவிலும் ‘மில்பா’ என்றும், வெனிசுலாவில் ‘கோனுகோ’ என்றும், பிரேசிலில் ‘ரோகா’ என்றும், மத்திய ஆப்ரிக்காவில் ‘மசோல்’ என்றும், இந்தோனேஷியாவில் ‘லடாங்’ என்றும், வியட்நாமில் ‘ரே’ என்றும் அழைக்கப்படுகிறது.

இந்தியாவில் இப்பழமையான சாகுபடி மத்தியப் பிரதேசத்தில் ‘பேவார்’ அல்லது ‘தாஹியா’ என்றும், ஆந்திரப் பிரதேசத்தில் ‘பொடு’ அல்லது ‘பெண்டா’ என்றும், ஒடிசாவில் ‘பாமா தாபி’ அல்லது ‘கோமன்’ அல்லது பிரிங்கா’ என்றும், மேற்கு தொடர்ச்சி மலைகளில் ‘குமாரி’ என்றும், தென்கிழக்கு இராஜஸ்தானில் ‘வால்ரே’ அல்லது ‘வால்ட்ரே’ என்றும், இமயமலை பகுதிகளில் ‘கில்’ என்றும், ஜார்கண்டில் ‘குருவா’ என்றும் மற்றும் வடகிழக்குப் பகுதியில் ‘ஜூம்மிங்’ என்றும் வழங்கப்படுகிறது.

படம். 4.1

Rinjha lived with her family in a small village at the outskirts of Diphu in Assam. She enjoys watching her family members clearing, slashing and burning a patch of land for cultivation. She often helps them in irrigating the fields with water running through a bamboo canal from the nearby spring. She loves the surroundings and wants to stay here as long as she can, but this little girl has no idea about the declining fertility of the soil and her family's search for fresh a patch of land in the next season.

Can you name the type of farming Rinjha's family is engaged in?

Can you enlist some crops which are grown in such farming?

Intensive Subsistence Farming

This type of farming is practised in areas of high population pressure on land. It is labour-intensive farming, where high doses of biochemical inputs and irrigation are used for obtaining higher production.

Can you name some of the states of India where such farming is practised?

Though the 'right of inheritance' leading to the division of land among successive generations has rendered land-holding size uneconomical, the farmers continue to take maximum output from the limited land in the absence of alternative source of livelihood. Thus, there is enormous pressure on agricultural land.

Commercial Farming

The main characteristic of this type of farming is the use of higher doses of modern inputs, e.g. high yielding variety (HYV) seeds, chemical fertilisers, insecticides and pesticides in order to obtain higher productivity. The degree of commercialisation of agriculture varies from one region to another. For example, rice is a commercial crop in Haryana and Punjab, but in Odisha, it is a subsistence crop.

Can you give some more examples of crops which may be commercial in one region and may provide subsistence in another region?

Plantation is also a type of commercial farming. In this type of farming, a single crop is grown on a large area. The plantation has an interface of agriculture and industry. Plantations cover large tracts of land, using capital intensive inputs, with the help of migrant labourers. All the produce is used as raw material in respective industries.

In India, tea, coffee, rubber, sugarcane, banana, etc., are important plantation crops. Tea in Assam and North Bengal coffee in Karnataka are some of the important plantation crops grown in these states. Since the production is mainly for market, a well-developed network of transport and communication connecting the plantation areas, processing industries and markets plays an important role in the development of plantations.

Fig. 4.2: Banana plantation in Southern part of India

Fig. 4.3: Bamboo plantation in North-east

அஸ்ஸாமில் உள்ள திபுவின் புறநகர்ப் பகுதியில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் ரிஞ்சா என்பவர் தனது குடும்பத்துடன் வசித்து வந்தார். தன் குடும்ப உறுப்பினர்கள் பயிரிடுவதற்காக நிலத்தை தூய்மை செய்து, வெட்டி எரிப்பதைப் பார்த்து மகிழ்கிறாள். அருகிலுள்ள நீரூற்றிலிருந்து மூங்கில் கால்வாய் வழியாக ஓடும் நீரைக் கொண்டு வயல்களுக்கு பாசனம் செய்வதில் அவள் அடிக்கடி அவர்களுக்கு உதவுகிறாள். அவள் சுற்றுப்புறத்தை நேசிக்கிறாள். தன்னால் முடிந்தவரை இங்கேயே இருக்க விரும்புகிறாள். ஆனால் இந்தச் சிறுமிக்கு மண்ணின் வளம் குறைந்து வருவது பற்றியும் அடுத்த பருவத்தில் புதிய நிலத்தைத் தேடும் தன் குடும்பத்தைப் பற்றியும் எதுவும் தெரியாது.

ரிஞ்சாவின் குடும்பம் எவ்வகையான விவசாயத்தில் ஈடுபட்டுள்ளது என்று கூற முடியுமா?

அத்தகைய விவசாயத்தில் விளையும் சில பயிர்களை பட்டியலிட முடியுமா?

தீவிர வாழ்வாதார விவசாயம்

அதிக மக்கள்தொகை உள்ள பகுதிகளில் இவ்வகை விவசாயம் செய்யப்படுகிறது. இது உழைப்பு மிகுந்த விவசாயமாகும். அங்கு அதிகளவு உயிர் வேதியியல் உள்ளீடுகள் மற்றும் நீர்ப்பாசனம் அதிக உற்பத்தியை பெற பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் இத்தகைய விவசாயம் மேற்கொள்ளப்படும் சில மாநிலங்களின் பெயர்களைக் கூற இயலுமா?

அடுத்தடுத்த தலைமுறைகளுக்கிடையே நிலத்தைப் பிரிப்பதற்கு வழிவகுத்த 'பரம்பரை உரிமை' நிலம் வைத்திருக்கும் அளவை பொருளாதாரமற்றதாக ஆக்கினாலும் விவசாயிகள் வாழ்வாதாரத்திற்கான மாற்று ஆதாரம் இல்லாத நிலையில் வரையறுக்கப்பட்ட நிலத்திலிருந்து அதிகபட்ச உற்பத்தியை தொடர்கின்றனர். இவ்வாறு விவசாய நிலங்களில் பெரும் அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

வணிக விவசாயம்

இவ்வகை விவசாயத்தின் முக்கிய பண்பு அதிக உற்பத்தித் திறனைப் பெறுவதற்காக அதிகளவு நவீன உள்ளீடுகளை பயன்படுத்துவதாகும். எடுத்துக்காட்டாக, அதிக மகசூலைத் தரும் விதை (HYV) வகைகள், வேதி உரங்கள், பூச்சிக் கொல்லிகள், களைக் கொல்லிகள் ஆகியவற்றை பயன்படுத்துகின்றனர். விவசாயத்தின் வணிக மயமாக்கலின் அளவு ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மாறுபடுகிறது. எடுத்துக்காட்டாக, ஹரியானாவிலும் பஞ்சாபிலும் அரிசி வணிகப்பயிராக உள்ளது. ஆனால் ஒடிசாவில் அது ஒரு வாழ்வாதாரப் பயிராகும்.

ஒரு பகுதியில் வணிகப் பயிராகவும் மற்றொரு பகுதியில் வாழ்வாதாரப் பயிராகவும் உள்ள பயிர்களுக்கு மேலும் சில உதாரணங்களை தர முடியுமா?

தோட்டம் என்பது வணிக விவசாயத்தின் ஒரு வகையாகும். இவ்வகையான விவசாயத்தில் ஒரு பயிர் அதிக பரப்பளவில் வளர்க்கப்படுகிறது. தோட்டம் விவசாயம் மற்றும் தொழில்துறையின் இடைநிலையை கொண்டுள்ளது. தோட்டங்கள் புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் உதவியுடன் மூலதனத் தீவிர உள்ளீடுகளைப் பயன்படுத்தி பெருமளவிலான நிலத் தடயங்களை உள்ளடக்கியதாகும். அனைத்து உற்பத்திப் பொருட்களும் அந்தந்த தொழில்களில் மூலப் பொருட்களாக பயன்படுத்தப்படுகின்றன.

இந்தியாவில் தேயிலை, காப்பி, ரப்பர், கரும்பு, வாழை போன்றவை முக்கியமான தோட்டப் பயிர்களாகும். அஸ்ஸாம் மற்றும் வடக்கு வங்காளத்தில் தேயிலையும், கர்னாடகத்தில் காப்பியும் இந்த மாநிலங்களில் விளையும் முக்கியமான தோட்டப் பயிர்களில் சில. உற்பத்தியானது முக்கியமாக சந்தைக்காக செய்யப்படுவதால் தோட்டப் பகுதிகள் பதனிடும் தொழிற்சாலைகள் மற்றும் நன்கு வளர்ச்சியடைந்த சந்தைகளை இணைக்கும் போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு வலையமைப்பு ஆகியவை தோட்டங்களின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது.

படம். **4.2:** *இந்தியாவின் தென் பகுதியிலுள்ள வாழைத் தோட்டம்*

படம். **4.3:** *வடகிழக்குப் பகுதியிலுள்ள மூங்கில் தோட்டம்*

Cropping Pattern

You have studied the physical diversities and plurality of cultures in India. These are also reflected in agricultural practices and cropping patterns in the country. Various types of food and fibre crops, vegetables and fruits, spices and condiments, etc. constitute some of the important crops grown in the country. India has three cropping seasons — **rabi**, **kharif** and **zaid**.

Rabi crops are sown in winter from October to December and harvested in summer from April to June. Some of the important rabi crops are wheat, barley, peas, gram and mustard. Though, these crops are grown in large parts of India, states from the north and north-western parts such as Punjab, Haryana, Himachal Pradesh, Jammu and Kashmir, Uttarakhand and Uttar Pradesh are important for the production of wheat and other rabi crops. Availability of precipitation during winter months due to the western temperate cyclones helps in the success of these crops. However, the success of the green revolution in Punjab, Haryana, western Uttar Pradesh and parts of Rajasthan has also been an important factor in the growth of the above-mentioned rabi crops.

Kharif crops are grown with the onset of monsoon in different parts of the country and these are harvested in September-October. Important crops grown during this season are paddy, maize, jowar, bajra, tur (arhar), moong, urad, cotton, jute, groundnut and soyabean. Some of the most important rice-growing regions are Assam, West Bengal, coastal regions of Odisha, Andhra Pradesh, Telangana, Tamil Nadu, Kerala and Maharashtra, particularly the (Konkan coast) along with Uttar Pradesh and Bihar. Recently, paddy has also become an important crop of Punjab and Haryana. In states like Assam, West Bengal and Odisha, three crops of paddy are grown in a year. These are *Aus*, *Aman* and *Boro*.

In between the rabi and the kharif seasons, there is a short season during the summer months known as the **Zaid** season. Some of the crops produced during 'zaid' are watermelon, muskmelon, cucumber, vegetables and fodder crops. Sugarcane takes almost a year to grow.

Major Crops

A variety of food and non food crops are grown in different parts of the country depending upon the variations in soil, climate and cultivation practices. Major crops grown in India are rice, wheat, millets, pulses, tea, coffee, sugarcane, oil seeds, cotton and jute, etc.

Rice: It is the staple food crop of a majority of the people in India. Our country is the second largest producer of rice in the world after China. It is a kharif crop which requires high temperature, (above 25°C) and high humidity with annual rainfall above 100 cm. In the areas of less rainfall, it grows with the help of irrigation.

Rice is grown in the plains of north and north-eastern India, coastal areas and the deltaic regions. Development of dense network

Fig. 4.4 (a): *Rice Cultivation*

Fig. 4.4 (b): *Rice is ready to be harvested in the field*

பயிரிடு முறை

இந்தியாவிலுள்ள இயற்பியல் வேறுபாடுகள் மற்றும் கலாச்சாரங்களின் பன்முகத் தன்மை குறித்து நீங்கள் படித்திருக்கிறீர்கள். இவை நாட்டின் விவசாயச் செயற்பாடுகள் மற்றும் பயிரிடு முறைகளிலும் பிரதிபலிக்கின்றன. பல்வேறு வகையான உணவு மற்றும் நார்ச்சத்துப் பயிர்கள், காய்கறிகள் மற்றும் பழங்கள், மசாலாப் பொருட்கள் மற்றும் சுவையூட்டிகள் போன்றவை நம் நாட்டில் வளர்க்கப்படும் சில முக்கியப் பயிர்களாகும். இந்தியாவில் மூன்று பயிர்ப் பருவங்கள் உள்ளன. அவை — ரபி, கரீஃப் மற்றும் ஜயாத்.

ரபி பயிர்கள் குளிர்காலத்தில் அக்டோபர் முதல் டிசம்பர் வரை விதைக்கப்பட்டு ஏப்ரல் முதல் ஜுன் வரை கோடை காலத்தில் அறுவடை செய்யப்படுகிறது. சில முக்கிய ரபி பயிர்களாவன: கோதுமை, பார்லி, பட்டாணி, பருப்பு மற்றும் கடுகு. இந்தியாவின் பெரும்பகுதிகளில் இப்பயிர்கள் பயிரிடப்பட்டாலும் வடக்கு மற்றும் வடமேற்கு மாநிலங்களான பஞ்சாப், ஹரியானா, ஹிமாச்சலப் பிரதேசம், ஜம்மு மற்றும் காஷ்மீர் போன்றவை கோதுமை மற்றும் பிற ரபி பயிர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை. மேற்கு மிதமான சூறாவளி காரணமாக குளிர்கால மாதங்களில் பெய்யும் மழையால் இப்பயிர்கள் நன்கு வளர உதவுகிறது. எனினும் மேலே குறிப்பிட்டுள்ள ரபி பயிர்களின் வளர்ச்சிக்கு பஞ்சாப், ஹரியானா, மேற்கு உத்திரப் பிரதேசம், இராஜஸ்தானின் சில பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பசுமைப்புரட்சியின் வெற்றியும் ஒரு காரணியாக உள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் பருவமழை தொடங்கியவுடன் கரீஃப் பயிர்கள் பயிரிடப்பட்டு செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. இப்பருவத்தில் பயிரிடப்படும் முக்கிய பயிர்கள் நெல், மக்காச் சோளம், கம்பு, துவரம் பருப்பு, பாசிப் பருப்பு, உளுந்து, பருத்தி, சணல், வேர்க்கடலை மற்றும் சோயாபீன் போன்றவை. அஸ்ஸாம், மேற்கு வங்காளம், ஒடிசா, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, தமிழ்நாடு, கேரளா மற்றும் மகாராஷ்டிரத்தின் கடலோரப் பகுதிகள் குறிப்பாக கொங்கண் கடற்கரை, உத்திரப் பிரதேசம் மற்றும் பீகார் உள்ளிட்டவை நெல் விளையும் முக்கியப் பகுதிகளாகும். சமீப காலமாக பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் நெல் முக்கிய பயிராக மாறியுள்ளது. அஸ்ஸாம், மேற்கு வங்காளம், ஒடிசா போன்ற மாநிலங்களில் ஓராண்டில் மூன்று முறை நெல் பயிரிடப்படுகிறது. இவை *ஆஸ், அமான்* மற்றும் *போரோ* எனப்படுகிறது.

ரபி மற்றும் கரீஃப் பருவங்களுக்கிடையில் கோடை மாதங்களில் ஜயாத் எனப்படும் குறுகிய பருவம் உள்ளது. 'ஜயாத்' பருவத்தின் போது உற்பத்தி செய்யப்படும் சில பயிர்கள் தர்பூசணி, முலாம்பழம், வெள்ளரி காய்கறிகள் மற்றும் தீவனப் பயிர்கள் ஆகும். கரும்பு வளர கிட்டத்தட்ட ஒரு வருடம் ஆகும்.

முக்கிய பயிர்கள்

பல்வேறு வகையான உணவு மற்றும் உணவல்லாத பயிர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் மண், காலநிலை மற்றும் சாகுபடி முறைகளின் மாறுபாடுகளைப் பொறுத்து வளர்க்கப்படுகின்றன. இந்தியாவில் பயிரிடப்படும் முக்கியப் பயிர்கள் அரிசி, கோதுமை, தினை, பருப்பு வகைகள், தேயிலை, காப்பி, கரும்பு, எண்ணெய் வித்துக்கள், பருத்தி மற்றும் சணல் போன்றவை.

அரிசி: இது இந்தியாவின் பெரும்பாலான மக்களின் முக்கிய உணவுப் பயிராகும். உலகில் அரிசி உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்தபடியாக நம் நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. இது ஒரு கரீஃப் பயிர் ஆகும். இதற்கு அதிக வெப்பநிலை (25°C க்கு மேல்) மற்றும் அதிக ஈரப்பதம் தேவைப்படும் ஆண்டு மழைப்பொழிவு 100 செ.மீ.க்கு குறைவாக மழைப்பொழிவு உள்ள பகுதிகளில் நீர்ப்பாசனத்தின் உதவியுடன் வளரும்.

படம். 4.4 (a): நெல் சாகுபடி

படம். 4.4 (b): வயலில் நெல் அறுவடைக்குத் தயாராக உள்ளது

India: *Distribution of Rice*

இந்தியா
நெல்
பாகிஸ்தான்
சீனா
(திபெத்)
நேபாளம்
பூடான்
பங்களாதேஷ்
மியான்மர்
அரபிக்கடல்
வங்காள விரிகுடா
குறைந்தளவு நெல் பயிரிடும் இடங்கள்
அதிகளவு நெல் பயிரிடும் இடங்கள்
இலட்சத் தீவுகள் (இந்தியா)
அந்தமான் நிகோபார் தீவுகள் (இந்தியா)
இந்தியப்பெருங்கடல்
இலங்கை
0 200 400 600 km

இந்தியா: நெல் பங்கீடு

of canal irrigation and tubewells have made it possible to grow rice in areas of less rainfall such as Punjab, Haryana and western Uttar Pradesh and parts of Rajasthan.

Wheat: This is the second most important cereal crop. It is the main food crop, in north and north-western part of the country. This rabi crop requires a cool growing season and a bright sunshine at the time of ripening. It requires 50 to 75 cm of annual rainfall evenly-distributed over the growing season. There are two important wheat-growing zones in the country – the Ganga-Satluj plains in the north-west and black soil region of the Deccan. The major wheat-producing states are Punjab, Haryana, Uttar Pradesh, Madhya Pradesh, Bihar and Rajasthan.

Millets: Jowar, bajra and ragi are the important millets grown in India. Though, these are known as coarse grains, they have very high nutritional value. For example, ragi is very rich in iron, calcium, other micro nutrients and roughage. Jowar is the third most important food crop with respect to area and production. It is a rain-fed crop mostly grown in the moist areas which hardly needs irrigation. Major Jowar producing States are Maharashtra, Karnataka, Andhra Pradesh and Madhya Pradesh.

Bajra grows well on sandy soils and shallow black soil. Major Bajra producing States are Rajasthan, Uttar Pradesh, Maharashtra, Gujarat and Haryana. Ragi is a crop of dry regions and grows well on red, black, sandy, loamy and shallow black soils. Major ragi producing states are: Karnataka, Tamil Nadu, Himachal Pradesh, Uttarakhand, Sikkim, Jharkhand and Arunachal Pradesh.

Fig. 4.5: *Wheat Cultivation*

Fig. 4.6: *Bajra Cultivation*

Maize: It is a crop which is used both as food and fodder. It is a kharif crop which requires temperature between 21°C to 27°C and grows well in old alluvial soil. In some states like Bihar maize is grown in rabi season also. Use of modern inputs such as HYV seeds, fertilisers and irrigation have contributed to the increasing production of maize. Major maize-producing states are Karnataka, Madhya Pradesh, Uttar Pradesh, Bihar, Andhra Pradesh and Telangana.

Pulses: India is the largest producer as well as the consumer of pulses in the world.

Fig. 4.7: *Maize Cultivation*

வட மற்றும் வடகிழக்கு இந்தியாவின் சமவெளிகளிலும் கடலோரப் பகுதிகளிலும் டெல்டாப் பகுதிகளிலும் நெல் விளைகிறது. அதிகப்படியான கால்வாய் நீர்ப்பாசனம் மற்றும் குழாய்க் கிணறுகளின் வளர்ச்சி, பஞ்சாப், ஹரியானா மற்றும் மேற்கு உத்திரப் பிரதேசம் மற்றும் இராஜஸ்தானின் சில பகுதிகள் மற்றும் குறைவான மழைப்பொழிவு உள்ள பகுதிகளிலும் நெல் பயிரிடுவதை சாத்தியமாக்கியுள்ளது.

கோதுமை: இது இரண்டாவது முக்கியமான தானியப் பயிர். இது நாட்டின் வடக்கு மற்றும் வடமேற்குப் பகுதியின் முக்கிய உணவுப் பயிராகும். இந்த ரபி பயிருக்கு குளிர்ச்சியான வளரும் பருவம் மற்றும் முதிரும் சமயத்தில் பிரகாசமான சூரிய ஒளியும் தேவைப்படுகிறது. இதற்கு 50 முதல் 75 செ.மீ ஆண்டு மழைப்பொழிவு வளரும் பருவத்தில் சமமாக விநியோகிக்கப்பட வேண்டும். நாட்டில் இரண்டு முக்கியமான கோதுமை வளரும் மண்டலங்கள் உள்ளன. வடமேற்கிலுள்ள கங்கை-சட்லெஜ் சமவெளி மற்றும் தக்காணத்தின் கரிசல் மண் பகுதி. பஞ்சாப், ஹரியானா, உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார் மற்றும் இராஜஸ்தான் ஆகியவை கோதுமையை உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்கள் ஆகும்.

படம். 4.5: கோதுமை சாகுபடி

தினைகள்: சோளம், கம்பு, கேழ்வரகு ஆகியவை இந்தியாவில் வளர்க்கப்படும் முக்கிய தினைகளாகும். இவை சிறு தானியங்கள் என்று அழைக்கப்பட்டாலும் அவை மிக அதிக ஊட்டச்சத்தை கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக கேழ்வரகில் இரும்புச் சத்து, கால்சியம் மற்றும் நுண்ணூட்டச் சத்துகள் மற்றும் சத்துகள் அதிகம் உள்ளன. பரப்பளவு மற்றும் உற்பத்தியை பொறுத்தவரை சோளம் மூன்றாவது முக்கிய உணவுப் பயிராகும். இது மானாவாரி பயிராகும். இது பெரும்பாலும் குறைந்த நீர்ப்பாசனம் தேவைப்படும் இடங்களில் வளர்க்கப்படுகிறது. மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகியவை சோளத்தை உற்பத்தி செய்யும் முக்கியமான மாநிலங்களாகும்.

படம். 4.6: கம்பு சாகுபடி

கம்பு மணல் மண் மற்றும் ஆழமற்ற கரிசல் மண்ணில் நன்றாக வளரும். இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம், குஜராத் மற்றும் ஹரியானா ஆகியவை கம்பு உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். கேழ்வரகு வறண்ட பகுதிகளில் விளையும் பயிராகும் மற்றும் செம்மண், கரிசல் மண், மணற்பாங்கான மண் களிமண் மற்றும் ஆழமற்ற கரிசல் மண்ணில் நன்றாக வளரும். கேழ்வரகை உற்பத்தி செய்யும் மாநிலங்களாவன: கர்னாடகம், தமிழ்நாடு, இமாச்சலப் பிரதேசம், உத்தரகண்ட், சிக்கிம், ஜார்கண்ட் மற்றும் அருணாச்சலப் பிரதேசம்.

மக்காச் சோளம்: இது உணவாகவும், தீவனமாகவும் பயன்படும். இது வளர 21°C முதல் 27°C வரை வெப்பநிலை தேவைப்படும். மற்றும் பழைய வண்டல் மண்ணில் நன்கு வளரும் கரீஃப் பயிராகும். பீகார் போன்ற சில மாநிலங்களில் ரபி பருவத்திலும் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. HYV விதைகள், உரங்கள் மற்றும் நீர்ப்பாசனம் போன்ற நவீன உள்ளீடுகளின் பயன்பாடு மக்காச்சோளத்தின் உற்பத்தியை அதிகரிக்க துணைபுரிகின்றது. மக்காச்சோளத்தை உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாவன: கர்னாடகம், மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம், பீகார், ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலங்கானா.

படம். 4.7: சோளம் சாகுபடி

India: Distribution of Wheat



இந்தியா: கோதுமை பங்கீடு

These are the major source of protein in a vegetarian diet. Major pulses that are grown in India are tur (arhar), urad, moong, masur, peas and gram. Can you distinguish which of these pulses are grown in the kharif season and which are grown in the rabi season? Pulses need less moisture and survive even in dry conditions. Being leguminous crops, all these crops except arhar help in restoring soil fertility by fixing nitrogen from the air. Therefore, these are mostly grown in rotation with other crops. Major pulse producing states in India are Madhya Pradesh, Rajasthan, Maharashtra, Uttar Pradesh and Karnataka.

Food Crops other than Grains

Sugarcane: It is a tropical as well as a subtropical crop. It grows well in hot and humid climate with a temperature of 21°C to 27°C and an annual rainfall between 75cm. and 100cm. Irrigation is required in the regions of low rainfall. It can be grown on a variety of soils and needs manual labour from sowing to harvesting. India is the second largest producer of sugarcane only after

Fig. 4.8: *Sugarcane Cultivation*

Brazil. It is the main source of sugar, gur (jaggary), khandsari and molasses. The major sugarcane-producing states are Uttar Pradesh, Maharashtra, Karnataka, Tamil Nadu, Andhra Pradesh, Telangana, Bihar, Punjab and Haryana.

Oil Seeds: In 2018 India was the second largest producer of groundnut in the world after China. In rapeseed production India was third largest producer in the world after Canada and China in 2018. Different oil seeds are grown covering approximately 12 per cent of the total cropped area of the country. Main oil-seeds produced in India are groundnut, mustard, coconut, sesamum (til), soyabean, castor seeds, cotton seeds, linseed and sunflower. Most of these are edible and used as cooking mediums. However, some of these are also used as raw material in the production of soap, cosmetics and ointments.

Groundnut is a kharif crop and accounts for about half of the major oilseeds produced in the country. Gujarat was the largest producer of groundnut followed by Rajasthan and Tamil Nadu in 2019–20. Linseed and mustard are rabi crops. Sesamum is a kharif crop in north and rabi crop in south India. Castor seed is grown both as rabi and kharif crop.

Tea: Tea cultivation is an example of plantation agriculture. It is also an important beverage crop introduced in India initially by the British. Today, most of the tea plantations are owned by Indians. The tea plant grows well in tropical and sub-tropical climates endowed with deep and fertile well-drained soil, rich in humus and organic matter. Tea bushes require warm and moist frost-free climate all through the year. Frequent showers evenly distributed over the year ensure

Fig. 4.9: *Groundnut, sunflower and mustard are ready to be harvested in the field*

பருப்பு வகைகள்: உலகிலேயே பருப்பு வகைகளின் மிகப்பெரிய உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் இந்தியா ஆகும். இவை சைவ உணவில் புரதத்தின் முக்கிய ஆதாரம் ஆகும். இந்தியாவில் விளையும் முக்கிய பருப்பு வகைகளாவன: துவரை, உளுந்து, பாசிப்பருப்பு, மசூர், பட்டாணி, கொள்ளு. காரீஃப் மற்றும் ரபி பருவங்களில் விளையும் பருப்பு வகைகளை வேறுபடுத்தி கூற இயலுமா? பருப்புகளுக்கு குறைந்த ஈரப்பதம் தேவை மற்றும் அவை வறண்ட நிலையிலும் உயிர் வாழும். பயறு வகைப் பயிர்கள் என்பதால் இப்பயிர்கள் அனைத்தும் காற்றில் உள்ள நைட்ரஜனை நிலைநிறுத்தி மண் வளத்தை மீட்டெடுக்க உதவுகின்றன. எனவே, இவை பெரும்பாலும் மற்ற பயிர்களுடன் சுழற்சி முறையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தியாவில் மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், மகாராஷ்டிரம், உத்திரப் பிரதேசம் மற்றும் கர்னாடகம் ஆகியவை பருப்பு உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும்.

தானியங்களைத் தவிர பிற உணவுப் பயிர்கள்

கரும்பு: இது ஒரு வெப்ப மண்டல மற்றும் துணை வெப்ப மண்டல பயிராகும். இது 21°C முதல் 27°C வரை வெப்பநிலை மற்றும் 75 செ.மீ முதல் 100 செ.மீ இடையே ஆண்டு மழைப்பொழிவு கொண்ட வெப்பமான மற்றும் ஈரமான காலநிலையில் நன்றாக வளரும். குறைவான மழைப்பொழிவு உள்ள பகுதிகளில் நீர்ப்பாசனம் தேவைப்படும். இது பல்வேறு மண்களில் வளரக்கூடியது. இதற்கு விதைப்பது முதல் அறுவடை செய்வது வரை மனித உழைப்பு தேவை.

படம். 4.8: கரும்பு சாகுபடி

கரும்பு உற்பத்தியில் பிரேசிலுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. இது சர்க்கரை, வெல்லம், கந்த்சாரி (சுத்திகரிக்கப்படாத சர்க்கரை), வெல்லப்பாகு ஆகியவற்றின் முக்கிய ஆதாரமாகும். கரும்பு உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாவன: உத்திரப் பிரதேசம், மகாராஷ்டிரம், கர்னாடகம், தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, பீகார் மற்றும் ஹரியானா.

எண்ணெய் வித்துக்கள்: 2018 ஆம் ஆண்டில் சீனாவுக்கு அடுத்தபடியாக உலகிலேயே வேர்க்கடலை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் இருந்தது. கடுகு உற்பத்தியில் 2018 ல் கனடா மற்றும் சீனாவிற்கு அடுத்தபடியாக உலகில் மூன்றாவது பெரிய உற்பத்தியாளராக இந்தியா இருந்தது. பல்வேறு எண்ணெய் வித்துக்கள் நாட்டின் மொத்த பயிரிடப்பட்ட பரப்பளவில் சுமார் 12 சதவீதத்தை உள்ளடக்கி வளர்க்கப்படுகின்றன. இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் முக்கிய எண்ணெய் வித்துக்கள் நிலக்கடலை, கடுகு, தேங்காய், எள், சோயாபீன், ஆமணக்கு விதைகள், பருத்தி விதைகள், ஆளி விதை மற்றும் சூரியகாந்தி. இவற்றில் பெரும்பாலானவை உண்ணக் கூடியவை மற்றும் சமையல் செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும் இவற்றில் சிலவற்றை சோப்பு, அழகு சாதனப் பொருட்கள், பூச மருந்துகள் தயாரிப்பதில் மூலப் பொருட்களாக பயன்படுத்துகின்றனர்.

வேர்க்கடலை ஒரு காரீஃப் பயிராகும் மற்றும் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் முக்கிய எண்ணெய் வித்துக்களில் பாதிக்கு மேலாக உள்ளது. 2019–20 =ல் வேர்க்கடலை உற்பத்தியில் குஜராத் முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து இராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. ஆளி விதையும் கடுகும் ரபி பயிர்களாகும். எள் வடக்கில் காரீஃப் பயிராகவும், தென்னிந்தியாவில் ரபி பயிராகவும் உள்ளது. ஆமணக்கு விதை ரபி மற்றும் காரீஃப் என்னும் இரண்டு காலங்களிலும் பயிரிடப்படுகின்றது.

தேயிலை: தேயிலை சாகுபடி என்பது தோட்ட விவசாயத்திற்கு எடுத்துக்காட்டாகும். இது ஆங்கிலேயர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கியமான பானப் பயிராகும். இன்று பெரும்பாலான தேயிலைத் தோட்டங்கள் இந்தியர்களுக்கு சொந்தமானவை. ஆழமான மற்றும் வளமான நன்கு வடிகட்டிய மண், மட்கிய மற்றும் கரிமப் பொருட்கள் நிறைந்த வெப்ப மண்டல மற்றும் துணை வெப்ப மண்டல காலநிலைகளில் தேயிலைச் செடி நன்றாக வளரும்.

படம். 4.9: வேர்க்கடலை, சூரியகாந்தி மற்றும் கடுகு ஆகிய பயிர்கள் வயல்களில் அறுவடைக்குத் தயாராக உள்ளன

continuous growth of tender leaves. Tea is a labour-intensive industry. It requires abundant, cheap and skilled labour. Tea is processed within the tea garden to restore its freshness. Major tea-producing states are Assam, hills of Darjeeling and Jalpaiguri districts, West Bengal, Tamil Nadu and Kerala. Apart from these, Himachal Pradesh, Uttarakhand, Meghalaya, Andhra Pradesh and Tripura are also tea-producing states in the country. In 2018 India was the second largest producer of tea after China.

Fig. 4.10: *Tea Cultivation*

Fig. 4.11: *Tea-leaves Harvesting*

Coffee: Indian coffee is known in the world for its good quality. The **Arabica** variety initially brought from Yemen is produced in the country. This variety is in great demand all over the world. Initially its cultivation was introduced on the Baba Budan Hills and even today its cultivation is confined to the Nilgiri in Karnataka, Kerala and Tamil Nadu.

Horticulture Crops: In 2018, India was the second largest producer of fruits and vegetables in the world after China. India is a producer of tropical as well as temperate fruits. Mangoes of Maharashtra, Andhra Pradesh, Telangana, Uttar Pradesh and West Bengal, oranges of Nagpur and Cherrapunjee (Meghalaya), bananas of Kerala, Mizoram, Maharashtra and Tamil Nadu, lichi and guava of Uttar Pradesh and Bihar, pineapples of Meghalaya, grapes of Andhra Pradesh, Telangana and Maharashtra, apples, pears, apricots and walnuts of Jammu and Kashmir and Himachal Pradesh are in great demand the world over.

Fig. 4.12: *Apricots, apple and pomegranate*

Fig. 4.13: *Cultivation of vegetables – peas, cauliflower, tomato and brinjal*

Source: *Pocket book of agricultural statistics, 2020, Govt. of India. Directorate of Economics and Statistics.*

மற்றும் ஈரமான உறைபனியற்ற காலநிலை தேவை. ஆண்டு முழுவதும் அடிக்கடி சமமாக பெய்யப்படும் மழை துளிர் இலைகளின் தொடர்ச்சியான வளர்ச்சியை உறுதி செய்கிறது. தேயிலை தீவிர உழைப்பாளர் தேவைப்படும் தொழிலாகும். இதற்கு ஏராளமான, மலிவான மற்றும் திறமையான உழைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர். தேயிலையின் புத்துணர்வை மீட்டெடுக்க தேயிலைத் தோட்டத்திற்குள்ளேயே பதப்படுத்தப்படுகிறது. அஸ்ஸாம், டார்ஜிலிங் மலைகள் மற்றும் ஜல்பைகுரி மாவட்டங்கள், மேற்கு வங்காளம், தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகியவை முக்கியமான தேயிலை உற்பத்தி செய்யும் மாநிலங்களாகும். இவை தவிர இமாச்சலப் பிரதேசம், உத்தரகண்ட், மேகாலயா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் திரிபுரா ஆகிய மாநிலங்களும் நாட்டில் தேயிலையை உற்பத்தி செய்கின்றன. 2018 ல் சீனாவுக்கு அடுத்தப்படியாக இந்தியா இரண்டாவது பெரிய தேயிலை உற்பத்தியாளராக இருந்தது.

படம். 4.10: தேயிலை சாகுபடி

படம். 4.11: தேயிலை இலைகள் அறுவடை

காஃபி: இந்தியாவின் காஃபி அதன் சிறந்த தரத்திற்காக உலகம் முழுவதும் அறியப்படுகிறது. ஆரம்பத்தில் ஏமனில் இருந்து கொண்டுவரப்பட்ட **அரேபிகா** வகை காஃபி பயிர் நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வகை காஃபிக்கு உலக அளவில் தேவை ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இதன் சாகுபடி பாபா புடன் குன்றுகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது இன்றளவும் நீலகிரி மலைப்பகுதிகளான கர்நாடகா, கேரளா மற்றும் தமிழ்நாடு மாநிலங்களில் சாகுபடி செய்யப்படுகிறது.

தோட்டக்கலைப் பயிர்கள்: 2018 ஆம் ஆண்டில் சீனாவிற்கு அடுத்தபடியாக பழங்கள் மற்றும் காய்கறிகளை உற்பத்தி செய்வதில் இந்தியா இரண்டாவது பெரிய நாடாக இருந்தது. இந்தியா வெப்ப மண்டல மற்றும் மித வெப்ப மண்டலத்திற்குரிய பழங்களை உற்பத்தி செய்கிறது. மகாராஷ்டிரம், ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, உத்தரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளத்தின் மாம்பழங்கள், நாக்பூர் மற்றும் சிரபுஞ்சி (மேகாலயா) பகுதிகளின் ஆரஞ்சுப் பழங்கள், கேரளா, மிசோரம், மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு மாநிலங்களின் வாழைப்பழங்கள், உத்திரப்பிரதேசம் மற்றும் பீகார் மாநிலங்களின் லிச்சி மற்றும் கொய்யா, மேகாலயாவின் அன்னாசிப் பழங்கள், ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா மற்றும் மகாராஷ்டிரத்தின் திராட்சைப் பழங்கள், ஜம்மு மற்றும் காஷ்மீர் மற்றும் இமாச்சலப் பிரதேசங்களின் ஆப்பிள்கள், பேரிக்காய்கள், ஆப்ரிகாட்ஸ் மற்றும் வாதுமைக் கொட்டைகளுக்கு உலகம் முழுவதும் அதிக தேவை உள்ளது.

படம். 4.12: ஆப்ரிகாட், ஆப்பிள் மற்றும் மாதுளை

படம். 4.13: காய்கறிகள் சாகுபடி – பட்டாணி, முட்டைகோஸ், தக்காளி மற்றும் கத்தரிக்காய்

ஆதாரம்: விவாசய புள்ளி விவரங்களின் பாக்கெட் புத்தகம், *2020,* பொருளாதார மற்றும் புள்ளியியல் இயக்குநரகம், இந்திய அரசு.

India is an important producer of pea, cauliflower, onion, cabbage, tomato, brinjal and potato.

Non-Food Crops

Rubber: It is an equatorial crop, but under special conditions, it is also grown in tropical and sub-tropical areas. It requires moist and humid climate with rainfall of more than 200 cm. and temperature above 25°C.

Rubber is an important industrial raw material. It is mainly grown in Kerala, Tamil Nadu, Karnataka and Andaman and Nicobar islands and Garo hills of Meghalaya.

Activity

List the items which are made of rubber and are used by us.

Fibre Crops: Cotton, jute, hemp and natural silk are the four major fibre crops grown in India. The first three are derived from the crops grown in the soil, the latter is obtained from cocoons of the silkworms fed on green leaves specially mulberry. Rearing of silk worms for the production of silk fibre is known as **sericulture**.

Cotton: India is believed to be the original home of the cotton plant. Cotton is one of the main raw materials for cotton textile industry. In 2017, India was second largest producer of cotton after China. Cotton grows well in drier parts of the black cotton soil of the Deccan plateau. It requires high temperature, light rainfall or irrigation, 210 frost-free days and bright sun-shine for its growth. It is a kharif crop and requires 6 to 8 months to mature. Major cotton-producing states are– Maharashtra, Gujarat, Madhya Pradesh, Karnataka, Andhra Pradesh, Telangana, Tamil Nadu, Punjab, Haryana and Uttar Pradesh.

Fig. 4.14: Cotton Cultivation

Jute: It is known as the golden fibre. Jute grows well on well-drained fertile soils in the flood plains where soils are renewed every year. High temperature is required during the time of growth. West Bengal, Bihar, Assam, Odisha and Meghalaya are the major jute producing states. It is used in making gunny bags, mats, ropes, yarn, carpets and other artefacts. Due to its high cost, it is losing market to synthetic fibres and packing materials, particularly the nylon.

Technological and Institutional Reforms

It was mentioned in the previous pages that agriculture has been practised in India for thousands of years. Sustained uses of land without compatible techno-institutional changes have hindered the pace of agricultural development. Inspite of development of sources of irrigation most of the farmers in large parts of the country still depend upon monsoon and natural fertility in order to carry on their agriculture. For a growing population, this poses a serious challenge. Agriculture which provides livelihood for more than 60 per cent of its population, needs some serious technical and institutional reforms. Thus, collectivisation, consolidation of holdings, cooperation and abolition of zamindari, etc. were given priority to bring about institutional reforms in the country after Independence. 'Land reform' was the main focus of our First Five Year Plan. The right of inheritance had already lead to fragmentation of land holdings necessitating consolidation of holdings.

The laws of land reforms were enacted but the implementation was lacking or lukewarm. The Government of India embarked upon introducing agricultural reforms to improve Indian agriculture in the 1960s and 1970s. The Green Revolution based on the use of package technology and the White Revolution (Operation Flood) were some of the strategies initiated to improve the lot of Indian agriculture. But, this too led to the concentration of development in few selected areas. Therefore, in the 1980s and 1990s, a comprehensive land development programme was initiated, which included both institutional and technical

இந்தியா பட்டாணி, முட்டைகோஸ், காளிபிளவர், வெங்காயம், தக்காளி, கத்தரிக்காய் மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவற்றின் முக்கிய உற்பத்தியாளராக உள்ளது.

உணவல்லாத பயிர்கள்

ரப்பர்: இது பூமத்திய ரேகை பயிர். ஆனால் சிறப்பு நிலமைகளின் கீழ் இது வெப்ப மண்டல மற்றும் மிதவெப்ப மண்டலப் பகுதிகளிலும் வளர்க்கப்படுகிறது. இது வளர்வதற்கு ஈரமும் ஈரப்பதமான காலநிலையும் 200 செ.மீ.க்கும் மேலான மழைப்பொழிவும், 25°C க்கும் அதிகமான வெப்பநிலையும் தேவைப்படுகிறது.

ரப்பர் ஒரு முக்கியமான தொழிற்துறை மூலப்பொருளாகும். இது முக்கியமாக கேரளா, தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகள் மற்றும் மேகாலயாவின் காரோ குன்றுகளில் வளர்க்கப்படுகிறது.

செயல்

ரப்பரால் தயாரிக்கப்பட்டு நம்மால் பயன்படுத்தப்படும் பொருட்களைப் பட்டியலிடுங்கள்.

நார் பயிர்கள்: பருத்தி, சணல், உறுதி சணல் மற்றும் இயற்கைப் பட்டு ஆகியவை இந்தியாவில் விளையும் நான்கு முக்கிய நார் பயிர்கள் ஆகும். முதல் மூன்று மண்ணில் விளையும் பயிர்களிலிருந்து பெறப்படுகிறது. பிந்தையது குறிப்பாக மல்பெரி என்னும் பச்சை இலைகளை உண்டு வாழும் பட்டுப்புழுக்களின் கக்கூன்களிலிருந்து பெறப்படுகிறது. பட்டு நார் உற்பத்திக்காக பட்டுப்புழுவை வளர்ப்பது **பட்டு வளர்ப்பு** எனப்படும்.

பருத்தி: பருத்தி செடியின் அசல் தாயகம் இந்தியா என்று நம்பப்படுகிறது. நெசவுத் தொழிலுக்கான முக்கிய மூலப்பொருட்களில் பருத்தியும் ஒன்றாகும். 2017 ஆம் ஆண்டில் பருத்தி உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தில் இருந்தது. தக்காண பீடபூமியின் கருப்பு பருத்தி மண்ணின் வறண்ட பகுதிகளில் பருத்தி நன்றாக வளரும். அதன் வளர்ச்சிக்கு அதிக வெப்பநிலை, லேசான மழை அல்லது நீர்ப்பாசனம், 210 உறைபனி இல்லாத நாட்கள் மற்றும் பிரகாசமான சூரிய ஒளி தேவைப்படுகிறது. இது ஒரு கரீஃப் பயிராகும் மற்றும் இது முதிர்ச்சி அடைய 6 முதல் 8 மாதங்களாகும். பருத்தி உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்கள்: மகாராஷ்டிரம், குஜராத், மத்தியப் பிரதேசம் கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, தமிழ்நாடு, பஞ்சாப், ஹரியானா மற்றும் உத்திரப் பிரதேசம்.

படம். 4.14: பருத்தி சாகுபடி

சணல்: இது தங்கநார் என்று அழைக்கப்படுகிறது. ஒவ்வோராண்டும் மண் புதுப்பிக்கப்படுகின்ற வெள்ளச் சமவெளிகளில் நன்கு வடிகட்டிய வளமான மண்ணில் சணல் நன்றாக வளரும். வளரும் காலத்தில் உயர் வெப்பநிலை தேவைப்படுகிறது. மேற்கு வங்காளம், பீகார், அசாம், ஒடிசா மற்றும் மேகாலயா ஆகியவை சணலை உற்பத்தி செய்யும் மாநிலங்களாகும். இது கோணிப்பைகள், பாய்கள், கயிறுகள், நூல், தரை விரிப்புகள் மற்றும் பிற கலைப் பொருட்கள் தயாரிப்பதில் பயன்படுத்தப்படுகிறது. அதன் அதிக விலை காரணமாக செயற்கை இழைகள் மற்றும் சிப்பம் கட்டும் பொருட்களுக்கு குறிப்பாக நைலானுக்கு சந்தையை இழந்து வருகிறது.

தொழில்நுட்ப மற்றும் நிறுவன சீர்த்திருத்தங்கள்

இந்தியாவில் விவசாயம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது என்று முந்தைய பக்கங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. தகுந்த தொழில்நுட்ப நிறுவன மாற்றங்கள் இல்லாமல் நிலத்தின் நீடித்த பயன்பாடு விவசாய வளர்ச்சியின் வேகத்தைத் தடுக்கிறது. நீர்ப்பாசன ஆதாரங்களின் வளர்ச்சி இருந்தபோதிலும் நாட்டின் பெரும்பகுதிகளில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் தங்கள் விவசாயத்தை மேற்கொள்வதற்காக இன்னும் பருவமழை மற்றும் இயற்கை வளத்தை நம்பி இருக்கிறார்கள். வளர்ந்து வரும் மக்கள்தொகைக்கு இது ஒரு கடுமையான சவாலாக உள்ளது. மக்கள்தொகையில் 60 சதவீதத்திற்கும் மேலானோருக்கு வாழ்வாதாரத்தை வழங்கும் விவசாயத்திற்கு சில தீவிரமான தொழில்நுட்ப மற்றும் நிறுவன சீர்த்திருத்தங்கள் தேவைப்படுகின்றன. இவ்வாறு சுதந்திரத்திற்கு பின் நாட்டில் நிறுவன சீர்த்திருத்தங்களை கொண்டு வருவதற்கு கூட்டாண்மை பங்குகளை ஒருங்கிணைத்தல், ஒத்துழைப்பு மற்றும் ஜமீன்தாரி ஒழிப்பு போன்றவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. 'நிலச் சீர்த்திருத்தம்' திட்டத்திற்கு முதல் ஐந்தாண்டு திட்டத்தில் அதிக முக்கியத்துவம் தரப்பட்டது. வாரிசுரிமையானது ஏற்கனவே நில உடைமைகளை துண்டுவதற்கு வழிவகுத்தது.

நிலச் சீர்த்திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன. ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவது குறைவாகவோ அல்லது மந்தமாகவோ இருந்தது. இந்திய அரசு 1960 கள் மற்றும் 1970 களில் இந்திய விவசாயத்தை மேம்படுத்த விவசாய சீர்த்திருத்தங்களை அறிமுகப்படுத்தியது. தொகுப்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்திய பசுமைப் புரட்சி மற்றும் வெண்மை புரட்சி (பால் உற்பத்தி) ஆகியவை இந்திய விவசாயத்தை மேம்படுத்த தொடங்கப்பட்ட சில உத்திகளாகும். ஆனால் இதுவும் சில தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் வளர்ச்சியானது குவிய தொடங்கியது. எனவே 1980 கள் மற்றும் 1990 களில் நிறுவன மற்றும் தொழில்நுட்ப சீர்த்திருத்தங்கள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய

Fig. 4.15: *Modern technological equipments used in agriculture*

reforms. Provision for crop insurance against drought, flood, cyclone, fire and disease, establishment of Grameen banks, cooperative societies and banks for providing loan facilities to the farmers at lower rates of interest were some important steps in this direction.

Kissan Credit Card (KCC), Personal Accident Insurance Scheme (PAIS) are some other schemes introduced by the Government of India for the benefit of the farmers. Moreover, special weather bulletins and agricultural programmes for farmers were introduced on the radio and television. The government also announces minimum support price, remunerative and procurement prices for important crops to check the exploitation of farmers by speculators and middlemen.

Activity

Collect information about agriculture, horticulture, agricultural schemes, etc. from *Farmers' Portal* website https://farmer.gov.in/FarmerHome.aspx. Discuss about the benefits of the information available on the portal.

Bhoodan – Gramdan

Mahatma Gandhi declared Vinoba Bhave as his spiritual heir. He also participated in Satyagraha as one of the foremost satyagrahis. He was one of the votaries of Gandhi's concept of **gram swarajya**. After Gandhiji's martyrdom, Vinoba Bhave undertook **padyatra** to spread Gandhiji's message covered almost the entire country. Once, when he was delivering a lecture at Pochampalli in Andhra Pradesh, some poor landless villagers demanded some land for their economic well-being. Vinoba Bhave could not promise it to them immediately but assured them to talk to the Government of India regarding provision of land for them if they undertook cooperative farming. Suddenly, Shri Ram Chandra Reddy stood up and offered 80 acres of land to be distributed among 80 land-less villagers. This act was known as 'Bhoodan'. Later he travelled and introduced his ideas widely all over India. Some zamindars, owners of many villages offered to distribute some villages among the landless. It was known as **Gramdan**. However, many land-owners chose to provide some part of their land to the poor farmers due to the fear of land ceiling act. This Bhoodan-Gramdan movement initiated by Vinoba Bhave is also known as the **Blood-less Revolution**.

படம். 4.15: *விவசாயத்தில் பயன்படுத்தப்படும் நவீன தொழில்நுட்ப இயந்திரங்கள்*

ஒரு விரிவான நில மேம்பாட்டு திட்டம் தொடங்கப்பட்டது. வறட்சி, வெள்ளம், புயல், தீ மற்றும் நோய்களுக்கு எதிராக பயிர்க் காப்பீடு வழங்குதல் கிராமிய வங்கிகள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வங்கிகளை நிறுவுதல், விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வசதிகளை வழங்குதல் ஆகியவை இப்போக்கின் சில முக்கிய படிகளாகும்.

விவசாய கடன் அட்டை (KCC), தனிநபர் விபத்துக் காப்பீட்டுத் திட்டம் (PAIS) ஆகியவை விவசாயிகளின் நலனுக்காக இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட சில திட்டங்களாகும். மேலும் வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் விவசாயிகளுக்கான சிறப்பு வானிலை அறிவிப்புகள் மற்றும் விவசாய நிகழ்ச்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. வணிகர்கள் மற்றும் இடைத்தரகர்களால் விவசாயிகள் சுரண்டப்படுவதைத் தடுக்க முக்கியமான பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை, இலாபம் மற்றும் கொள்முதல் விலைகளையும் அரசாங்கம் அறிவிக்கிறது.

செயல்

விவசாயம், தோட்டக்கலை, விவசாய திட்டங்கள் போன்றவற்றை விவசாயிகளின் இணையதள வலைதளமான https://farmer.gov.in/FarmerHome.aspx ல் சேகரிக்கவும். இணையதளத்தில் கிடைக்கும் தகவல்களின் நன்மைகளைப் பற்றி விவாதிக்கவும்.

பூதான் – கிராமதான்

மகாத்மா காந்தி வினோபா பாவேயை தனது ஆன்மீக வாரிசு என அறிவித்தார். அவரும் சத்தியாகிரகத்தில் முதன்மை சத்தியாகிரகிகளில் ஒருவராக கலந்து கொண்டார். காந்தியின் **கிராம சுயாட்சிக்** கருத்தினை வலியுறுத்தியவர்களில் இவரும் ஒருவர். காந்தியின் தியாகத்திற்குப் பின்னர் வினோபா பாவே காந்தியின் செய்தியை பரப்புவதற்காக **பாத யாத்திரை**யை மேற்கொண்டார். ஒருமுறை ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள போச்சம்பள்ளியில் அவர் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்த போது, நிலமற்ற ஏழை கிராமவாசிகள் சிலர் தங்களுடைய பொருளாதார நலனுக்காக கொஞ்சம் நிலம் கேட்டனர். வினோபா பாவே அவர்களுக்கு உடனடியாக வாக்குறுதி அளிக்கவில்லை. ஆனால் அவர்கள் கூட்டுறவு விவசாயத்தை மேற்கொண்டால் அவர்களுக்கு நிலம் வழங்குவது தொடர்பாக இந்திய அரசுடன் பேசுவதாக உறுதியளித்தார்.

திடீரென ஸ்ரீராமச் சந்திர ரெட்டி எழுந்து 80 ஏக்கர் நிலத்தை நிலமற்ற 80 கிராமவாசிகளுக்கு பகிர்ந்தளிக்க முன்வந்தார். இச்செயல் 'பூதான்' (நிலதானம்) என்று அழைக்கப்பட்டது. பின்னர் அவர் இந்தியா முழுவதும் பயணம் செய்து தனது கருத்துகளை பரவலாக அறிமுகப்படுத்தினார். சில ஜமீன்தார்கள், பல கிராமங்களின் உரிமையாளர்கள், சில கிராமங்களை நிலமற்றவர்களுக்கு வழங்க முன்வந்தனர். இது **கிராமதான்** என்று அறியப்பட்டது. எனினும் நில உச்சவரம்பு சட்டத்தின் அச்சம் காரணமாக பல நில உரிமையாளர்கள் தங்கள் நிலத்தின் ஒரு பகுதியை ஏழை விவசாயிகளுக்கு வழங்க தேர்வு செய்தனர். வினோபா பாவேயால் தொடங்கப்பட்ட இந்த பூதான் – கிராம்தான் இயக்கம் **இரத்தமில்லாத புரட்சி** என்றும் அழைக்கப்படுகிறது.

Exercises Exercises Exercises Exercises Exercises

1. Multiple choice questions.

   (i) Which one of the following describes a system of agriculture where a single crop is grown on a large area?
   - (a) Shifting Agriculture
   - (b) Plantation Agriculture
   - (c) Horticulture
   - (d) Intensive Agriculture

   (ii) Which one of the following is a rabi crop?
   - (a) Rice
   - (b) Gram
   - (c) Millets
   - (d) Cotton

   (iii) Which one of the following is a leguminous crop?
   - (a) Pulses
   - (b) Jawar
   - (c) Millets
   - (d) Sesamum

2. Answer the following questions in 30 words.

   (i) Name one important beverage crop and specify the geographical conditions required for its growth.

   (ii) Name one staple crop of India and the regions where it is produced.

   (iii) Enlist the various institutional reform programmes introduced by the government in the interest of farmers.

3. Answer the following questions in about 120 words.

   (i) Suggest the initiative taken by the government to ensure the increase in agricultural production.

   (ii) Describe the geographical conditions required for the growth of rice.

Project Work

1. Group discussion on the necessity of literacy among farmers.
2. On an outline map of India show wheat producing areas.

AP SCERT



பயிற்சிகள் பயிற்சிகள் பயிற்சிகள் பயிற்சிகள் பயிற்சிகள்

1. கொள்குறி வினாக்கள்.

(i) பின்வருவனவற்றில் எது பெரிய பரப்பில் ஒற்றைப் பயிர் விளையும் விவசாய முறையை விவரிக்கிறது?

(a) மாற்று விவசாயம்

(b) தோட்ட விவசாயம்

(c) தோட்டக் கலை

(d) தீவிர விவசாயம்

(ii) பின்வருவனவற்றில் எது ரபி பயிர்?

(a) அரிசி

(b) கொள்ளு

(c) தினை

(d) பருத்தி

(iii) பின்வருவனவற்றில் எது பயறு வகை பயிர்?

(a) பருப்பு வகைகள்

(b) வெல்லம்

(c) தினை
நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை எரிவாயு, யுரேனியம் மற்றும் மின்சாரம் போன்றவற்றிலிருந்து நம்மால் ஆற்றலைப் பெற முடியும். ஆற்றல் வளங்களை மரபு சார்ந்த மற்றும் மரபுசாரா வளங்கள் என வகைப்படுத்தலாம். **மரபு சார்ந்த வளங்களில்** எரிவிறகு, வறட்டை, நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை எரிவாயு மற்றும் மின்சாரம் (நீர் மின்சாரம் மற்றும் அனல் மின்சாரம் இரண்டும்) ஆகியவை அடங்கும். **மரபுசாரா வளங்களில்** சூரிய, காற்று, அலை, புவிவெப்ப, உயிர் எரிவாயு மற்றும் அணு ஆற்றல் ஆகியவை அடங்கும். கிராமப்புற இந்தியாவில் எரிவிறகு மற்றும் சாண வறட்டி ஆகியவை மிகவும் சாதாரணமாக காணப்படும். ஒரு மதிப்பீட்டின்படி கிராமப்புற குடும்பங்களில் 70 சதவீதத்திற்கும் அதிகமான ஆற்றல் தேவையை இவை இரண்டும் நிறைவு செய்கின்றன. வனப்பகுதி குறைந்து வருவதால் இவற்றை தொடர்வது கடினமாகி வருகிறது. மேலும் சாண வறட்டியை பயன்படுத்துவதும் ஊக்கமளிக்கப்படுவதில்லை. ஏனெனில் இது விவசாயத்தில் பயன்படுத்தக்கூடிய மிகவும் மதிப்புமிக்க உரத்தை அதிகளவில் நுகர்கிறது.

மரபு சார்ந்த ஆற்றல் வளங்கள்

நிலக்கரி: இந்தியாவில் நிலக்கரி மிகவும் அதிகளவில் கிடைக்கும் படிம எரிபொருளாகும். இது நாட்டின் ஆற்றல் தேவைகளில் கணிசமான பகுதியை வழங்குகிறது. இது மின் உற்பத்திக்காகவும், தொழில்துறைக்கு மின்சாரம் வழங்கவும், உள்நாட்டு தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. இந்தியா தனது வணிக ஆற்றல் தேவைகளை நிறைவு

படம் **5.9 (a)**: *நிலக்கரி சுரங்கத்தின் உள்ளே இருந்து ஒரு காட்சி*

படம் **5.9 (b)**: *நிலக்கரி சுரங்கத்திற்கு வெளியே இருந்து ஒரு காட்சி*

செய்வதற்கு நிலக்கரியின் மீது அதிகளவில் சார்ந்துள்ளது.

நிலக்கரி மில்லியன் கணக்கான ஆண்டுகளாக தாவரப் பொருட்களின் இறுக்கத்தால் உருவாகிறது என்பதை நீங்கள் ஏற்கனவே அறிவீர்கள். எனவே நிலக்கரி அழுத்தத்தின் அளவுகள் மற்றும் ஆழத்தைப் பொறுத்தும் தோண்டும் காலத்தை பொறுத்தும் பல்வேறு வடிவங்களில் காணப்படுகிறது. சதுப்பு நிலங்களில் அழுகும் தாவரங்கள் கரியை உற்பத்தி செய்கின்றன. இது குறைந்த கார்பன் மற்றும் அதிக ஈரப்பதம் மற்றும் குறைந்த வெப்பத்திறன் கொண்டது. **லிக்னைட்** என்பது குறைந்த தரம் கொண்ட பழுப்பு நிலக்கரி. இது அதிக ஈரப்பதத்துடன் கூடிய மென்மையான தன்மையுடையது. தமிழ்நாட்டின் நெய்வேலியில் உள்ள முக்கிய லிக்னைட் இருப்புகள் மின்சார உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றன. ஆழத்தில் புதைக்கப்பட்ட மற்றும் அதிகரித்த வெப்பநிலைக்குட்பட்ட நிலக்கரி **நிலக்கீழடுக்கு நிலக்கரி** ஆகும். வணிகப் பயன்பாட்டில் இது மிகவும் பிரபலமான நிலக்கரி ஆகும். உலோகவியல் நிலக்கரி என்பது வெடிப்பு உலைகளில் இரும்பினை உருக்குவதற்கு ஒரு சிறப்பு மதிப்பினைக் கொண்ட ஓர் உயர்தர நிலக்கீழடுக்கு நிலக்கரி ஆகும். **உயர்தர நிலக்கரி** என்பது கடினமான நிலக்கரி ஆகும்.

India: *Distribution of Coal, Oil and Natural Gas*

Activity

Collect information about cross country natural gas pipelines laid by GAIL (India) under "One Nation One Grid".

இந்தியா : நிலக்கரி, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு விநியோகம்

செயல்:

"One Nation One Grid" கீழ் GAIL (இந்தியா) மூலம் அமைக்கப்பட்ட நாடு கடந்த இயற்கை எரிவாயு குழாய்கள் பற்றிய தகவல்களை சேகரிக்கவும்.

In India coal occurs in rock series of two main geological ages, namely Gondwana, a little over 200 million years in age and in tertiary deposits which are only about 55 million years old. The major resources of Gondwana coal, which are metallurgical coal, are located in Damodar valley (West Bengal-Jharkhand). Jharia, Raniganj, Bokaro are important coalfields. The Godavari, Mahanadi, Son and Wardha valleys also contain coal deposits.

Tertiary coals occur in the north eastern states of Meghalaya, Assam, Arunachal Pradesh and Nagaland.

Remember coal is a bulky material, which loses weight on use as it is reduced to ash. Hence, heavy industries and thermal power stations are located on or near the coalfields.

Petroleum

Petroleum or mineral oil is the next major energy source in India after coal. It provides fuel for heat and lighting, lubricants for machinery and raw materials for a number of manufacturing industries. Petroleum refineries act as a "**nodal industry**" for synthetic textile, fertiliser and numerous chemical industries.

Most of the petroleum occurrences in India are associated with anticlines and fault traps in the rock formations of the tertiary age. In regions of folding, anticlines or domes, it occurs where oil is trapped in the crest of the upfold. The oil bearing layer is a porous limestone or sandstone through which oil may flow. The oil is prevented from rising or sinking by intervening non-porous layers.

Petroleum is also found in fault traps between porous and non-porous rocks. Gas, being lighter usually occurs above the oil.

Mumbai High, Gujarat and Assam are major petroleum production areas in India. From the map locate the 3 major off shore fields of western India. Ankeleshwar is the most important field of Gujarat. Assam is the oldest oil producing state of India. Digboi, Naharkatiya and Moran-Hugrijan are the important oil fields in the state.

Natural Gas

Natural Gas is found with petroleum deposits and is released when crude oil is brought to the surface. It can be used as a domestic and industrial fuel. It is used as fuel in power sector to generate electricity, for heating purpose in industries, as raw material in chemical, petrochemical and fertilizer industries, as transport fuel and as cooking fuel. With the expansion of gas infrastructure and local city gas distribution (COD) networks, natural gas is also emerging as a preferred transport fuel (CNG) and cooking fuel (PNG) at homes. India's major gas reserves are found in the Mumbai High and allied fields along the west coast which are supplemented by finds in the Cambay basin. Along the East Coast, new reserves of natural gas have been discovered in the Krishna-Godavari basin.

The first 1,700 km long Hazira-Vijaipur-Jagdishpur (HVJ) cross country gas pipeline, constructed by GAIL (India), linked Mumbai High and Bassein gas fields with various fertilizer, power and industrial complexes in western and northen India. This artery provided impetus to Indian gas market development. Overall, India's gas infrastructure has expanded over ten times from 1,700 km to 18,500 km of cross-country pipelines and is expected to soon reach over 34, 000 km as Gas Grid by linking all gas sources and consuming markets across the country including North Eastern states.

Electricity

Electricity has such a wide range of applications in today's world that, its percapita consumption is considered as an index of development. Electricity is generated mainly in two ways: by running water which drives hydro turbines to generate *hydro electricity;* and by burning other fuels such as coal, petroleum and natural gas to drive turbines to produce *thermal power.* Once generated the electricity is exactly the same.

Activity

Name some river valley projects and write the names of the dams built on these rivers.

இந்தியாவில் நிலக்கரி இரண்டு முக்கிய நிலவியல் யுகங்களின் பாறைத் தொடர்களில் ஏற்படுகிறது. அதாவது úLôi hYô] ô 200 மில்லியன் ஆண்டுகளுக்கு சற்று அதிகமாகவும், சுமார் 55 மில்லியன் ஆண்டுகள் பழமையான மூன்றாம் நிலை இருப்புகளிலும் ஏற்படுகின்றன. உலோகவியல் நிலக்கரியான கோண்ட்வானா நிலக்கரியின் முக்கிய வளங்கள் தாமோதர் நதிப்பள்ளத்தாக்கில் (மேற்கு வங்காளம்-ஜார்கண்ட்) அமைந்துள்ளன. ஜாரியா, ராணிகஞ்ச், பொகாரோ ஆகியவை முக்கியமான நிலக்கரி வயல்களாகும். கோதாவரி, மகாநதி, சோன் மற்றும் வார்தா பள்ளத்தாக்குகளிலும் நிலக்கரி படிவுகள் உள்ளன.

வடகிழக்கு மாநிலங்களான மேகாலயா, அசாம், அருணாசலப் பிரதேசம் மற்றும் நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் மூன்றாம் நிலை நிலக்கரி ஏற்படுகிறது.

நிலக்கரி ஒரு பருமனான பொருள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இது சாம்பலாக குறைக்கப்படுவதால் பயன்பாட்டில் எடையை இழக்கிறது. எனவே கனரகத் தொழிற்சாலைகள் மற்றும் அனல்மின் நிலையங்களில் அல்லது அதற்கு அருகில் அமைந்துள்ளன.

பெட்ரோலியம்

இந்தியாவில் நிலக்கரிக்கு அடுத்தபடியாக பெட்ரோலியம் அல்லது தாது எண்ணெய் உள்ளது. இது வெப்பம் மற்றும் வெளிச்சத்தை வழங்குவதற்கான எரிபொருளையும் இயந்திரங்களுக்கு மசகுப் பொருள்களையும், எண்ணற்ற உற்பத்தித் தொழில்களுக்கு மூலப் பொருள்களையும் வழங்குகிறது. பெட்ரோலிய சுத்திகரிப்பு நிலையங்கள், செயற்கை ஜவுளி, உரம் மற்றும் ஏராளமான இரசாயனத் தொழில்களுக்கு "**ஒருங்கிணைப்பு தொழில்**"ஆக செயல்படுகின்றது.

இந்தியாவின் பெரும்பாலான பெட்ரோலிய உருவாக்கங்கள் மூன்றாம் காலகட்டத்தின் பாறை அமைப்புகளில் உள்ள மல்முகமடுப்பு மற்றும் வெடிப்பு பொறிகளுடன் தொடர்புடையவை. மடிப்பு, மல்முகமடுப்பு அல்லது குவிமாடங்களின் பகுதிகளில் மேல்மட்ட முகடுகளில் எண்ணெய் சிக்கியிருக்கும் இடத்தில் இது ஏற்படுகிறது. எண்ணெய் தாங்கிய அடுக்கு ஒரு நுண்துளை கொண்ட சுண்ணாம்புக்கல் அல்லது மணற்கல் ஆகும். இதன் மூலம் எண்ணெய் பாயும். நுண்துளையற்ற அடுக்குகள் குறுக்கிடுவதால் எண்ணெய் உயருதல் அல்லது மூழ்காமல் தடுக்கப்படுகிறது.

பெட்ரோலியம் நுண்துளை கொண்ட மற்றும் நுண்துளையற்ற பாறைகளுக்கிடையே உள்ள பிளவுகளிலும் காணப்படுகிறது. இயற்கை எரிவாயு சாதாரணமாக லேசானதாக உள்ளதால் எண்ணெய்க்கு மேலே ஏற்படுகிறது.

மும்பை ஹை, குஜராத் மற்றும் அசாம் ஆகியவை இந்தியாவில் பெட்ரோலியம் உற்பத்தி செய்யும் முக்கிய பகுதிகளாகும். வரைபடத்தில் மேற்கு இந்தியாவின் 3 பெரிய கடற்கரை வயல்களை கண்டறியவும். குஜராத்தின் மிக முக்கியமான வயல் அங்கலேஸ்வர். இந்தியாவின் மிக பழமையான எண்ணெய் உற்பத்தி மாநிலம் அசாம் திக்பாய், நகர்காடியா மற்றும் மோரன் ஹுக்ரிஜன் ஆகியவை மாநிலத்தின் முக்கியமான எண்ணெய் வயல்களாகும்.

இயற்கை எரிவாயு

இயற்கை எரிவாயு பெட்ரோலியப் படிவுகளுடன் காணப்படுகிறது மற்றும் கச்சா எண்ணெய் மேற்பரப்பிற்கு கொண்டு வரப்படும்போது வெளியிடப்படுகிறது. இதை வீட்டு மற்றும் தொழிற்துறை எரிபொருளாக பயன்படுத்தலாம். இது மின்சாரம் உற்பத்தி செய்ய மின்துறையில் எரிபொருளாகவும், தொழிற்சாலைகளில் வெப்பமூட்டும் நோக்கத்திற்காகவும் இரசாயன, பெட்ரோ-வேதிப்பொருட்கள் மற்றும் உரத் தொழில்களில் மூலப்பொருளாகவும், போக்குவரத்து எரிபொருளாகவும், சமையல் எரிபொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது. எரிவாயு உள்கட்டமைப்பு மற்றும் உள்ளூர் நகர விரிவாக்கத்துடன் எரிவாயு விநியோகம் (COD) வலைதளங்கள், எரிவாயு விரும்பத்தக்க போக்குவரத்து எரிபொருளாகவும் (CNG) வீடுகளில் சமையல் எரிபொருளாகவும் (PNG) மாறி வருகிறது. இந்தியாவின் முக்கிய எரிவாயு இருப்புகள் மும்பை ஹை மற்றும் மேற்கு கடற்கரையை ஒட்டிய வயல்களில் காணப்படுகின்றன. அவை காம்பே படுகையிலுள்ள கண்டுபிடிப்புகளால் கூடுதலாக வழங்கப்படுகின்றன. கிழக்கு கடற்கரையில் கிருஷ்ணா-கோதாவரி படுகையில் இயற்கை எரிவாயுவின் புதிய இருப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

1,700 கி.மீ. நீளம் கொண்ட முதல் ஹசிரா-விஜய்ப்பூர் ஜெகதீஷ்பூர் (HVJ) இடையேயான எரிவாயு குழாய் வழி GAIL (இந்தியா) ஆல் கட்டப்பட்டு மும்பை ஹை மற்றும் பாசின் எரிவாயு வயல்களை மேற்கு மற்றும் வட இந்தியாவில் உள்ள பல்வேறு உரங்கள், மின்சாரம் மற்றும் தொழில்துறை வளாகங்களுடன் இணைத்தது. இந்த இணைப்பு இந்திய எரிவாயு சந்தை வளர்ச்சிக்கு உத்வேகம் அளித்தது. இந்தியாவின் எரிவாயு உள்கட்டமைப்பு 1,700 கி.மீ. முதல் 18,500 கி.மீ. வரையிலான நாட்டின் குறுக்கே உள்ள குழாய்கள் வரை பத்து மடங்கு விரிவடைந்துள்ளது மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் உட்பட நாடு முழுவதுமுள்ள அனைத்து எரிவாயு வளங்களையும் நுகர்வு சந்தைகளையும் இணைப்பதன் மூலம் விரைவில் 34,000 கி.மீ. எரிவாயு கட்டத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மின்சாரம்

மின்சாரம் என்பது இன்றைய உலகில் பரவலான பயன்பாடுகளைக் கொண்டுள்ளது. அதன் தனிநபர் நுகர்வானது வளர்ச்சியின் குறியீடாகக் கருதப்படுகிறது.

மின்சாரம் முக்கியமாக இரண்டு வழிகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. நீர் மின்சாரமானது ஓடும் நீரானது ஹைட்ரோ டர்பைன்களை இயக்குவதன் மூலம் உருவாக்கப்படுகிறது. மேலும் அனல் மின்சாரத்தை உருவாக்க பிற எரிபொருள்களான நிலக்கரி, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு போன்றவற்றை எரிப்பதன் வாயிலாக டர்பைன்கள் இயக்கப்படுகின்றன. ஒருமுறை உருவாக்கப்பட்ட மின்சாரம் அதேபோன்று இருக்கும்.

செயல்:

சில நதிப்பள்ளத்தாக்கு அணைக்கட்டு திட்டங்களின் பெயர்களை குறிப்பிடவும். மேலும் இந்த நதிகளின் மீது கட்டப்பட்டுள்ள அணைகளின் பெயர்களை எழுதவும்.

India: *Distribution of Nuclear and Thermal Power Plants*

இந்தியா : அணு மற்றும் அனல்மின் நிலையங்களின் விநியோகம்

Hydro electricity is generated by fast flowing water, which is a renewable resource. India has a number of multi-purpose projects like the Bhakra Nangal, Damodar Valley corporation, the Kopili Hydel Project etc. producing hydroelectric power.

Thermal electricity is generated by using coal, petroleum and natural gas. The thermal power stations use non-renewable fossil fuels for generating electricity.

Collect information about thermal/hydel power plants located in your state. Show them on the map of India.

Non-Conventional Sources of Energy

The growing consumption of energy has resulted in the country becoming increasingly dependent on fossil fuels such as coal, oil and gas. Rising prices of oil and gas and their potential shortages have raised uncertainties about the security of energy supply in future, which in turn has serious repercussions on the growth of the national economy. Moreover, increasing use of fossil fuels also causes serious environmental problems. Hence, there is a pressing need to use renewable energy sources like solar energy, wind, tide, biomass and energy from waste material. These are called non-conventional energy sources.

India is blessed with an abundance of sunlight, water, wind and biomass. It has the largest programmes for the development of these renewable energy resources.

Nuclear or Atomic Energy

It is obtained by altering the structure of atoms. When such an alteration is made, much energy is released in the form of heat and this is used to generate electric power. Uranium and Thorium, which are available in Jharkhand and the Aravalli ranges of Rajasthan are used for generating atomic or nuclear power. The Monazite sands of Kerala is also rich in Thorium.

Locate the 6 nuclear power stations and find out the state in which they are located.

Solar Energy

India is a tropical country. It has enormous possibilities of tapping solar energy. Photovoltaic technology converts sunlight directly into electricity. Solar energy is fast becoming popular in rural and remote areas. Some big solar power plants are being established in different parts of India which will minimise the dependence of rural households on firewood and dung cakes, which in turn will contribute to environmental conservation and adequate supply of manure in agriculture.



Fig. 5.10: *Solar operated electronic milk testing equipment*

Activity

Collect information about newly established solar power plants in India.

Wind power

India has great potential of wind power. The largest wind farm cluster is located in Tamil Nadu from Nagarcoil to Madurai. Apart from these, Andhra Pradesh, Karnataka, Gujarat, Kerala, Maharashtra and Lakshadweep have important wind farms. Nagarcoil and Jaisalmer are well known for effective use of wind energy in the country.

Fig. 5.11: *Wind mills – Nagarcoil*

புதுப்பிக்கக்கூடிய வளமான நீர் மின்சாரம் வேகமாக பாயும் நீரால் உருவாக்கப்படுகிறது. பக்ராநங்கல், தாமோதர் நதிப்பள்ளத்தாக்கு அமைப்பு, கோபிலி நீர்மின் அணைத்திட்டம் போன்ற நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் பல பல்நோக்கு அணைத்திட்டங்கள் இந்தியாவில் உள்ளன.

நிலக்கரி, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மூலம் அனல் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அனல் மின்நிலையங்கள் மின் உற்பத்திக்கு புதுப்பிக்க முடியாத படிம எரிபொருட்களை பயன்படுத்துகின்றன.

உங்கள் மாநிலத்தில் அமைந்துள்ள அனல்/ நீர் மின்நிலையங்கள் பற்றிய தகவல்களை சேகரிக்கவும். அவற்றை இந்திய வரைபடத்தில் குறிப்பிடவும்.

மரபுசாரா எரிசக்தி வளங்கள்

வளர்ந்து வரும் ஆற்றல் நுகர்வானது நிலக்கரி, எண்ணெய் மற்றும் எரிவாயு போன்ற புதைபடிவ எரிபொருட்களின் மீது நாடு அதிகளவில் சார்ந்துள்ளது. எண்ணெய் மற்றும் எரிவாயுவின் விலை உயர்வு மற்றும் அவற்றின் நிலையான பற்றாக்குறை ஆகியவை எதிர்காலத்தின் எரிசக்தி விநியோகத்தின் பாதுகாப்பைப் பற்றிய நிச்சயமற்ற தன்மையை எழுப்பியுள்ளது. இது தேசிய பொருளாதாரத்தின் வளர்ச்சியில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். மேலும் புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாடு அதிகரித்து வருவது கடுமையான சுற்றுச்சூழல் பிரச்சனைகளையும் ஆற்றல், கடல் அலை ஆற்றல், சாண எரிவாயு மற்றும் கழிவுப் பொருட்களிலிருந்து ஆற்றல் போன்ற புதுப்பிக்கக் கூடிய எரிசக்தி ஆதாரங்களை பயன்படுத்துவதற்கான அழுத்தமான தேவை உள்ளது. இவை மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இந்தியா ஏராளமான சூரிய ஒளி, நீர், காற்று மற்றும் சாண எரிவாயு ஆற்றல்களால் ஆசிர்வதிக்கப்பட்டுள்ளது. இது புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி வளங்களை மேம்படுத்துவதற்கான மிகப்பெரிய திட்டங்களை கொண்டுள்ளது.

உட்கரு அல்லது அணு ஆற்றல்

அணுக்களின் அமைப்பினை மாற்றுவதன் மூலம் இது பெறப்படுகிறது. அதுபோன்ற மாற்றத்தை செய்யும் போது வெப்பத்தின் வடிவில் அதிக ஆற்றல் வெளியிடப்படுகிறது. மேலும் இந்த வெப்பம் மின்சக்தியை உருவாக்க பயன்படுத்தப்படுகிறது. ஜார்க்கண்ட் மற்றும் இராஜஸ்தானின் ஆரவல்லி மலைத்தொடர்களில் கிடைக்கும் யுரேனியம் மற்றும் தோரியம் அணு அல்லது உட்கரு ஆற்றலை உருவாக்க பயன்படுகிறது. கேரளாவின் மோனசைட் மணலில் அதிகளவில் தோரியம் காணப்படுகிறது.

ஆறு அணுமின் நிலையங்களைக் குறிப்பிட்டு அவை அமைந்துள்ள மாநிலங்களை குறிப்பிடவும்.

சூரிய ஆற்றல்

இந்தியா ஒரு வெப்ப மண்டல நாடு. இது சூரிய ஆற்றலைப் பெறுவதற்கான ஏராளமான சாத்தியக்கூறுகளை கொண்டுள்ளது. ஒளி மின்னழுத்த தொழில்நுட்பம் சூரிய ஒளியை நேரடியாக மின்சாரமாக மாற்றுகிறது. சூரிய ஆற்றல் மின்சாரம் கிராமப்புறங்களிலும் தொலைதூரப் பகுதிகளிலும் வேகமாக பிரபலமடைந்து வருகிறது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் சில பெரிய சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இது கிராமப்புற குடும்பங்கள் விறகு, பசுச்சாண வறட்டிகள் மீது சார்ந்திருப்பதை குறைக்கும். இது சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் விவசாயத்தில் போதுமான உரம் வழங்குவதற்கு துணைபுரியும்.



படம் 5.10: சூரிய ஒளியில் இயங்கும் மின்னணு பால் பரிசோதனை கருவி

செயல்:

இந்தியாவில் புதிதாக நிறுவப்பட்ட சூரிய மின்நிலையங்கள் பற்றிய தகவல்களை சேகரிக்கவும்.

காற்றாலை மின்சாரம்

இந்தியாவில் காற்றாலை ஆற்றல் பெரும் நிலையாற்றலைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் நாகர்கோவிலிலிருந்து மதுரை வரை மிகப்பெரிய காற்றாலை பண்ணைகளின் தொகுப்பு அமைந்துள்ளது. இவை தவிர ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, குஜராத், கேரளா, மகாராஷ்டிரா மற்றும் இலட்சத்தீவுகளில் முக்கியமான காற்றாலைகள் உள்ளன. நாகர்கோவில் மற்றும் ஜெய்சல்மார் ஆகியவை காற்றாலை ஆற்றலை திறம்பட பயன்படுத்துவதற்கு புகழ்பெற்றவை.

படம் 5.11: காற்றாலைகள்-நாகர்கோவில்

Biogas

Shrubs, farm waste, animal and human waste are used to produce biogas for domestic consumption in rural areas. Decomposition of organic matter yields gas, which has higher thermal efficiency in comparison to kerosene, dung cake and charcoal. Biogas plants are set up at municipal, cooperative and individual levels. The plants using cattle dung are known as *'Gobar gas plants'* in rural India. These provide twin benefits to the farmer in the form of energy and improved quality of manure. Biogas is by far the most efficient use of cattle dung. It improves the quality of manure and also prevents the loss of trees and manure due to burning of fuel wood and cow dung cakes.

Fig. 5.12: *Biogas Plant*

Tidal Energy

Oceanic tides can be used to generate electricity. Floodgate dams are built across inlets. During high tide water flows into the inlet and gets trapped when the gate is closed. After the tide falls outside the flood gate, the water retained by the floodgate flows back to the sea via a pipe that carries it through a power-generating turbine.

In India the Gulf of Khambhat, the Gulf of Kuchchh in Gujarat on the western coast and Gangetic delta in Sunderban regions of West Bengal provide ideal conditions for utilising tidal energy.

Geo Thermal Energy

Geo thermal energy refers to the heat and electricity produced by using the heat from the interior of the Earth. Geothermal energy exists because, the Earth grows progressively hotter with increasing depth. Where the geothermal gradient is high, high temperatures are found at shallow depths. Groundwater in such areas absorbs heat from the rocks and becomes hot. It is so hot that when it rises to the earth's surface, it turns into steam. This steam is used to drive turbines and generate electricity.

There are several hundred hot springs in India, which could be used to generate electricity. Two experimental projects have been set up in India to harness geothermal energy. One is located in the Parvati valley near Manikarn in Himachal Pradesh and the other is located in the Puga Valley, Ladakh.

Conservation of Energy Resources

Energy is a basic requirement for economic development. Every sector of the national economy – agriculture, industry, transport, commercial and domestic – needs inputs of energy. The economic development plans implemented since Independence necessarily required increasing amounts of energy to remain operational. As a result, consumption of energy in all forms has been steadily rising all over the country.

In this background, there is an urgent need to develop a sustainable path of energy development. Promotion of energy conservation and increased use of renewable energy sources are the twin planks of sustainable energy.

India is presently one of the least energy efficient countries in the world. We have to adopt a cautious approach for the judicious use of our limited energy resources. For example, as concerned citizens we can do our bit by using public transport systems instead of individual vehicles; switching off electricity when not in use, using power-saving devices and using non-conventional sources of energy. After all, "energy saved is energy produced".

சாண எரிவாயு

கிராமப்புறங்களில் வீட்டு பயன்பாடடிற்காக உயிர் வாயுவை உற்பத்தி செய்ய புதர்கள், பண்ணைக் கழிவுகள், விலங்குகள் மற்றும் மனிதக் கழிவுகள் பயன்படுத்தப்படுகின்றன. கரிமப் பொருட்களின் சிதைவு வாயுவை உற்பத்தி செய்கிறது. இது மண்ணெண்ணெய், பசுஞ்சாண வறட்டி மற்றும் கரியுடன் ஒப்பிடுகையில் அதிக வெப்பத்திறன் கொண்டது. உயிர்வாயு ஆலைகள் நகராட்சி, கூட்டுறவு மற்றும் தனிப்பட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ளன. கால்நடைகளின் சாணத்தை பயன்படுத்தும் ஆற்றல் நிலையங்களை கோபார் வாயு நிலையங்கள் என்று இந்திய கிராமப்புறங்களில் அழைக்கப்படுகின்றன. இவை விவசாயிக்கு ஆற்றல் வடிவிலும் மேம்படுத்தப்பட்ட உரமாகவும் இரட்டை நன்மைகளை வழங்குகின்றன. சாண எரிவாயு என்பது கால்நடைகளின் சாணத்தை மிகவும் திறமையாக பயன்படுத்துவது ஆகும். இது உரத்தின் தரத்தை மேம்படுத்துவதோடு எரிபொருள் விறகுகள் மற்றும் பசுஞ்சாண வறட்டிகளை எரிப்பதால் மரங்கள் மற்றும் எரு இழப்பைத் தடுக்கிறது.

படம் 5.12: *சாண எரிவாயு ஆலை*

கடல்அலை ஆற்றல்

பெருங்கடல் அலைகளைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யலாம். வெள்ளத்தடுப்பு அணைகள் நுழைவாயில்கள்களின் குறுக்கே கட்டப்பட்டுள்ளன. அதிக அலைகளின்போது தண்ணீர் நுழைவாயிலில் பாய்ந்து, கதவு மூடப்படும்போது சிக்கிக் கொள்கிறது. வெள்ள வாயிலுக்கு வெளியே அலை விழுந்த பிறகு வெள்ள வாயிலால் தக்க வைக்கப்பட்ட நீர் மின்சாரம் உருவாக்கும் விசையாழி மூலம் அதைக்கொண்டு செல்லும் குழாய் வழியாக மீண்டும் கடலுக்குள் பாய்கிறது.

இந்தியாவில் கம்பத் வளைகுடா, மேற்கு கடற்கரையில் குஜராத்தின் கச் வளைகுடா மற்றும் மேற்கு வங்காளத்தின் சுந்தரவன பகுதிகளில் உள்ள கங்கை டெல்டா ஆகியவை அலை ஆற்றலை பயன்படுத்துவதற்கு ஏற்ற சூழ்நிலைகளை வழங்குகின்றன.

புவிவெப்ப ஆற்றல்

புவிவெப்ப ஆற்றல் என்பது பூமியின் உட்புறத்திலிருந்து வெப்பத்தை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் வெப்பம் மற்றும் மின்சாரத்தை குறிக்கிறது. புவிவெப்ப ஆற்றல் இருப்பதால்தான் ஆழம் அதிகரிக்க பூமி படிப்படியாக வெப்பமாக ஆகிறது. புவிவெப்பத் திறன் அதிகமாக உள்ள இடத்தில் குறைந்த ஆழங்களிலேயே அதிக வெப்பநிலைகள் காணப்படும். அதுபோன்ற பகுதிகளில் உள்ள நிலத்தடி நீர் பாறைகளிலிருந்து வெப்பத்தை உறிஞ்சி வெப்பமாகிறது. இது மிகவும் வெப்பமாக இருப்பதால் அது பூமியின் மேற்பரப்பிற்கு வரும்போது நீராவியாக மாறும். இந்த நீராவி விசையாழிகளை இயக்கவும் மின்சாரம் தயாரிக்கவும் பயன்படுகிறது.

இந்தியாவில் மின்சாரம் தயாரிக்க பயன்படும் பல நூறு வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. புவிவெப்ப ஆற்றலைப் பயன்படுத்த இரண்டு சோதனைத் திட்டங்கள் இந்தியாவில் அமைக்கப்பட்டுள்ளன. ஒன்று இமாச்சலப் பிரதேசத்தில் மணிகரன் அருகே பார்வதி பள்ளத்தாக்கிலும், மற்றொன்று லடாக்கின் புகா பள்ளத்தாக்கிலும் அமைந்துள்ளன.

ஆற்றல் வளங்களின் பாதுகாப்பு

பொருளாதார வளர்ச்சிக்கு ஆற்றல் அடிப்படைத் தேவையாகும். விவசாயம், தொழில், போக்குவரத்து, வர்த்தகம் மற்றும் வீடு போன்ற அனைத்து பொருளாதாரத் துறைக்கும் ஆற்றல் உள்ளீடுகள் தேவைப்படுகிறது. விடுதலைக்குப் பின் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள் செயல்பாட்டில் இருக்க அதிகளவு ஆற்றல் தேவைப்பட்டது. இதன் விளைவாக, அனைத்து வடிவங்களிலும் ஆற்றல் நுகர்வு நாடு முழுவதும் படிப்படியாக உயர்ந்து வருகிறது.

இந்தப் பின்னணியில் ஆற்றல் வளர்ச்சிக்கான நிலையான பாதையை உருவாக்க வேண்டிய அவசரத் தேவை உள்ளது. ஆற்றல் சேமிப்பை ஊக்குவித்தல் மற்றும் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி ஆதாரங்களின் அதிகரித்த பயன்பாடு ஆகியவை நிலையான ஆற்றலின் இரட்டை தளங்களாகும்.

இந்தியா தற்போது குறைந்த ஆற்றல் திறன் கொண்ட நாடுகளில் ஒன்றாகும். நமது வரையறுக்கப்பட்ட ஆற்றல் வளங்களை நியாயமான முறையில் பயன்படுத்துவதற்கு நாம் எச்சரிக்கையான அணுகுமுறையைக் கடைபிடிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, சம்பந்தப்பட்ட குடிமக்களாகிய நாம் தனிப்பட்ட வாகனங்களுக்கு பதிலாக, பொது வாகனங்களை பயன்படுத்துவதன் மூலம் நம்மால் இயன்றதை செய்யலாம். பயன்பாட்டில் இல்லாதபோது மின்சாரத்தை நிறுத்துதல், ஆற்றல் சேமிப்பு சாதனங்களை பயன்படுத்துதல் மற்றும் மரபு சாரா ஆற்றல் வளங்களை பயன்படுத்துதல், அனைத்திற்கும் மேலாக, "சேமிக்கப்பட்ட ஆற்றல் உற்பத்தி செய்யப்பட்ட ஆற்றலுக்கு சமமாகும்".

EXERCISES

1. Multiple choice questions.

   (i) Which one of the following minerals is formed by decomposition of rocks, leaving a residual mass of weathered material?

   (a) coal (b) bauxite (c) gold (d) zinc

   (ii) Koderma, in Jharkhand is the leading producer of which one of the following minerals?

   (a) bauxite (b) mica (c) iron ore (d) copper

   (iii) Minerals are deposited and accumulated in the stratas of which of the following rocks?

   (a) sedimentary rocks (c) igneous rocks
   (b) metamorphic rocks (d) none of the above

   (iv) Which one of the following minerals is contained in the Monazite sand?

   (a) oil (b) uranium (c) thorium (d) coal

2. Answer the following questions in about 30 words.

   (i) Distinguish between the following in not more than 30 words.
   (a) ferrous and non-ferrous minerals
   (b) conventional and non-conventional sources of energy

   (ii) What is a mineral?

   (iii) How are minerals formed in igneous and metamorphic rocks?

   (iv) Why do we need to conserve mineral resources ?

3. Answer the following questions in about 120 words.

   (i) Describe the distribution of coal in India.

   (ii) Why do you think that solar energy has a bright future in India?

AP SCERT

பயிற்சிகள் பயிற்சிகள் பயிற்சிகள் பயிற்சிகள் பயிற்சிகள்

1. கொள்குறி வினாக்கள்.

(i) பாறைகளின் சிதைவினால் உருவாகும் பின்வரும் தாதுக்களில் எது எஞ்சியிருக்கும் வளிமண்டலப் பொருட்களை விட்டுச் செல்கிறது?

(a) நிலக்கரி (b) பாக்சைட் (c) தங்கம் (d) துத்தநாகம்

(ii) ஜார்க்கண்டில் உள்ள கோடெர்மா பின்வரும் எந்த தாதுக்களில் முன்னணி உற்பத்தியாளராக உள்ளது?

(a) பாக்சைட் (b) மைகா (c) இரும்புத்தாது (d) தாமிரம்

(iii) பின்வரும் எந்த பாறைகளின் அடுக்குகளில் தாதுக்கள் படிந்து குவிக்கப்படுகின்றன?

(a) படிவுப் பாறைகள் (c) அனற் பாறைகள்

(b) உருமாற்றப் பாறைகள் (d) மேற்கண்ட எதுவுமில்லை

(iv) மோனசைட் மணலில் பின்வரும் எந்த தாது உள்ளது?

(a) எண்ணெய் (b) யுரேனியம் (c) தோரியம் (d) நிலக்கரி

2. பின்வரும் வினாக்களுக்கு 30 சொற்களில் விடையளி.

(i) பின்வருவனவற்றை 30 சொற்களுக்கு மிகாமல் வேறுபடுத்தி எழுதவும்.

(a) இரும்பு மற்றும் இரும்பு அல்லாத தாதுக்கள்

(b) மரபு சார்ந்த மற்றும் மரபுசாரா ஆற்றல் வளங்கள்

(ii) தாது என்றால் என்ன?

(iii) அனற்பாறைகள் மற்றும் உருமாற்றப் பாறைகளில் தாதுக்கள் எவ்வாறு உருவாகின்றன?

(iv) தாது வளங்களை நாம் ஏன் பாதுகாக்க வேண்டும்?

3. பின்வரும் வினாக்களுக்கு சுமார் 120 சொற்களில் விடையளிக்கவும்.

(i) இந்தியாவில் நிலக்கரி விநியோகத்தை விவரிக்கவும்.

(ii) இந்தியாவில் சூரிய சக்திக்கு ஒளிமயமான எதிர்காலம் இருப்பதாக நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்?

Activity

Fill the name of the correct mineral in the crossword below:



Across

1. A ferrous mineral (9)
2. Raw material for cement industry (9)
3. Finest iron ore with magnetic properties (9)
4. Highest quality hard coal (10)
5. Aluminium is obtained from this ore (7)
6. Khetri mines are famous for this mineral (6)
7. Formed due to evaporation (6)

Down

1. Found in placer deposit (4)
2. Iron ore mined in Bailadila (8)
3. Indispensable for electrical industry (4)
4. Geological Age of coal found in north east India (8)
5. Formed in veins and lodes (3)

APSCERT

செயற்பாடு:

கீழே உள்ள குறுக்கெழுத்து அட்டவணையில் சரியான தாதுக்களின் பெயரை நிரப்பவும்:



குறுக்கே

1. இரும்புத்தாது (5)
2. சிமெண்ட் தொழிலுக்கான மூலப்பொருள் (8)
3. காந்தப் பண்புகளுடன் கூடிய சிறந்த இரும்புத் தாது (5)
4. மிக உயர்ந்த தரமான கடினமான நிலக்கரி (8)
5. இந்த தாதுவிலிருந்து அலுமினியம் பெறப்படுகிறது (4)
6. கேத்ரி சுரங்கம் இந்த தாதுவிற்கு புகழ்பெற்றவை (4)
7. ஆவியாதல் காரணமாக உருவாகும் படிவத்தாது (4)

கீழ்

1. ஒதுக்குப் படிவுகளில் காணப்படுவது (3)
2. பைலடிலாவில் வெட்டப்பட்ட இரும்புத்தாது (4)
3. மின்சாரத் தொழிலுக்கு இன்றியமையாதது (5)
4. வடகிழக்கு இந்தியாவில் நிலக்கரியின் புவியியல் வயது (8)
5. தாது படுகை மற்றும் உலோகத்தாது வண்டல்களில் ஏற்படுவது (4)

S5N3Q7

MANUFACTURING INDUSTRIES 6

On the occassion of Diwali, Harish went to a market with his parents. They purchased shoes and clothes for him. His mother purchased utensils, sugar, tea and diyas (earthen lamps). Harish observed that the shops in the market were flooded with items for sale. He wondered how so many items could be made in such large quantities. His father explained that shoes, clothes, sugar etc. are manufactured by machines in large industries, some utensils are manufactured in small industries, while items like **diyas** are made by individual artisans in household industry.

Do you have some ideas about these industries?

Production of goods in large quantities after processing from raw materials to more valuable products is called manufacturing. Do you know that paper is manufactured from wood, sugar from sugarcane, iron and steel from iron ore and aluminium from bauxite? Do you also know that some types of clothes are manufactured from yarn which itself is an industrial product?

People employed in the secondary activities manufacture the primary materials into finished goods. The workers employed in steel factories, car, breweries, textile industries, bakeries etc. fall into this category. Some people are employed in providing services. In this chapter, we are mainly concerned with manufacturing industries which fall in the secondary sector.

The economic strength of a country is measured by the development of manufacturing industries.

Importance of Manufacturing

Manufacturing sector is considered the backbone of development in general and economic development in particular mainly because–

- Manufacturing industries not only help in modernising agriculture, which forms the backbone of our economy, they also reduce the heavy dependence of people on agricultural income by providing them jobs in secondary and tertiary sectors.
- Industrial development is a precondition for eradication of unemployment and poverty from our country. This was the main philosophy behind public sector industries and joint sector ventures in India. It was also aimed at bringing down regional disparities by establishing industries in tribal and backward areas.
- Export of manufactured goods expands trade and commerce, and brings in much needed foreign exchange.
- Countries that transform their raw materials into a wide variety of finished goods of higher value are prosperous. India's prosperity lies in increasing and diversifying its manufacturing industries as quickly as possible.

Agriculture and industry are not exclusive of each other. They move hand in hand. For instance, the agro-industries in India have given a major boost to agriculture by raising its productivity. They depend on the latter for raw materials and sell their products such as irrigation pumps, fertilisers, insecticides, pesticides, plastic and PVC pipes, machines and tools, etc. to the farmers. Thus, development and competitiveness of

E1D3R7

6 உற்பத்தி தொழில்கள்

தீபாவளியன்று ஹரீஷ் தனது பெற்றோருடன் சந்தைக்குச் சென்றான்.அவர்கள் அவனுக்காக காலணிகளையும் ஆடைகளையும் வாங்கினர். அவனுடைய தாயார் பாத்திரங்கள், சர்க்கரை, தேயிலை, அகல் விளக்குகள் ஆகியவற்றை வாங்கினர். சந்தையிலுள்ள கடைகளில் விற்பனைக்காக பொருட்கள் வெள்ளம் போல் நிரம்பி வழிந்ததை ஹரிஷ் கவனித்தான். எப்படி இவ்வளவு பொருட்களை இவ்வளவு பெரிய அளவில் தயாரிக்க முடியும் என்று வியப்படைந்தான். காலணிகள், உடைகள், சர்க்கரை போன்றவை பெரிய தோழிற்சாலைகளில் இயந்திரங்களால் தயாரிக்கப்படுகின்றன. சில பாத்திரங்கள் சிறு தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படுகின்றன. அதே நேரத்தில் அகல் விளக்கு போன்ற பொருட்கள் வீட்டுத் தொழிலாக கைவினைக் கலைஞர்களால் தயாரிக்கப்படுகின்றன என்று அவரது தந்தை விளக்கினார்.

இந்தத் தொழில்களைப் பற்றி உங்களுக்கு ஏதேனும் யோசனைகள் உள்ளதா?

மூலப்பொருட்களிலிருந்து அதிக மதிப்பு மிக்க பொருட்களுக்கு செயலாக்கத்திற்கு பிறகு பெரிய அளவில் பொருட்களை உற்பத்தி செய்வதை உற்பத்தி என்று அழைக்கப்படுகிறது. காகிதம் மரத்திலிருந்தும், சர்க்கரை கரும்பிலிருந்தும், இரும்பு மற்றும் எஃகு இரும்புத் தாதுவிலிருந்தும் பாக்சைட்டிலிருந்து அலுமினியமும் தயாரிக்கப்படுகின்றன என்பதும் உங்களுக்கு தெரியுமா?

இரண்டாம் நிலை நடவடிக்கைகளில் பணிபுரியும் மக்கள் முதன்மைப் பொருட்களை முடிவுப் பொருட்களாக உற்பத்தி செய்கிறார்கள். எஃகு தொழிற்சாலைகள் கார், மதுபான ஆலைகள், ஜவுளித் தொழிற்சாலைகள், பேக்கரிகள் போன்றவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள் இந்த வகைக்குள் அடங்குவர். சிலர் சேவைகள் வழங்குவதில் பணிபுரிகின்றனர். இந்த அத்தியாயத்தில் நாம் முக்கியமாக இரண்டாம் நிலைத் துறையின் கீழ்வரும் உற்பத்தித் தொழில்களில் முக்கியமாக அக்கறை கொண்டுள்ளோம்.

நாட்டின் பொருளாதார வலிமையானது உற்பத்தித் தொழில்களின் வளர்ச்சியைக் கொண்டு அளவிடப்படுகிறது.

உற்பத்தியின் முக்கியத்துவம்

உற்பத்தி துறையானது பொதுவாக வளர்ச்சியின் முதுகெலும்பாகவும் குறிப்பாக பொருளாதார வளர்ச்சியின் முதுகெலும்பாகவும் கருதப்படுகிறது. ஏன் எனில்,

- உற்பத்தித் தொழில்கள் விவசாயத்தை நவீனமயமாக்க உதவுவது மட்டுமின்றி இது நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும் அமைகிறது. அவை விவசாய வருமானத்தின் மீது மக்கள் அதிக அளவில் சார்ந்திருப்பதைக் குறைக்க இரண்டாம் மற்றும் மூன்றாம் துறைகளில் அவர்களுக்கு வேலைகளை வழங்குகின்றன.
- தொழில் வளர்ச்சி என்பது நம் நாட்டிலிருந்து வேலையின்மை மற்றும் வறுமையை ஒழிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முன்நிபந்தனையாகும். இந்தியாவில் பொதுத்துறைத் தொழில்கள் மற்றும் கூட்டுத்துறை முயற்சிகளுக்குப் பின்னால் உள்ள முக்கிய தத்துவம் இதுதான். பழங்குடியினர் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் தொழில்களை நிறுவுவதன் மூலம் வட்டார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் நோக்கத்தையும் கொண்டது.
- உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் ஏற்றுமதியானது வாணிகம் மற்றும் வர்த்தகத்தை விரிவுப்படுத்துகிறது. மேலும் அதிக அளவில் தேவைப்படும் அந்நிய செலாவணியையும் கொண்டு வருகிறது.
- தங்கள் மூலப் பொருட்களை அதிக மதிப்புள்ள பல்வேறு வகையான முடிவுப் பொருட்களாக மாற்றும் நாடுகள் வளமானவை. இந்தியாவின் செழிப்பு அதன் உற்பத்தித் தொழில்களை விரைவாக அதிகரிக்கச் செய்வதிலும் பல்வகைப்படுத்துவதிலும் உள்ளது.

விவசாயமும் தொழிற்துறையும் ஒன்றுக்கொன்று தனிப்பட்டவை அல்ல. அவை ஒன்றுடன் ஒன்று கைகோர்த்து நகர்பவை. எடுத்துக்காட்டாக, இந்தியாவில் விவசாயத் தொழில்கள் அதன் உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலம் விவசாயத்திற்கு பெரும் ஊக்கத்தை அளித்துள்ளன. அவை மூலப்பொருட்களுக்கு தொழிற்துறையின் மீது ஆதாரப்பட்டுள்ளன மற்றும் நீர்ப்பாசன பம்புகள், உரங்கள், பூச்சிக் கொல்லிகள், களைக் கொல்லிகள்,

manufacturing industry has not only assisted agriculturists in increasing their production but also made the production processes very efficient.

In the present day world of globalisation, our industry needs to be more efficient and competitive. Self-sufficiency alone is not enough. Our manufactured goods must be at par in quality with those in the international market. Only then, will we be able to compete in the international market.

Classification of Industries

List the various manufactured products you use in your daily life such as – transistors, electric bulbs, vegetable oil, cement, glassware, petrol, matches, scooters, automobiles, medicines and so on. If we classify the various industries based on a particular criterion then we would be able to understand their manufacturing better. Industries may be classified as follows:

On the basis of source of raw materials used:

- Agro based: cotton, woollen, jute, silk textile, rubber and sugar, tea, coffee, edible oil.
- Mineral based: iron and steel, cement, aluminium, machine tools, petrochemicals.

According to their main role:

- Basic or key industries are those which supply their products as raw materials to manufacture other goods e.g. iron and steel and copper smelting, aluminum smelting.
- Consumer industries that produce goods for direct use by consumers – sugar, toothpaste, paper, sewing machines, fans etc.

On the basis of capital investment:

- A small scale industry is defined with reference to the maximum investment allowed on the assets of a unit. This limit has changed over a period of time. At present the maximum investment allowed is rupees one crore.

On the basis of ownership:

- Public sector, owned and operated by government agencies – BHEL, SAIL etc.
- Private sector industries owned and operated by individuals or a group of individuals –TISCO, Bajaj Auto Ltd., Dabur Industries.
- Joint sector industries which are jointly run by the state and individuals or a group of individuals. Oil India Ltd. (OIL) is jointly owned by public and private sector.
- Cooperative sector industries are owned and operated by the producers or suppliers of raw materials, workers or both. They pool in the resources and share the profits or losses proportionately. Such examples are the sugar industry in Maharashtra, the coir industry in Kerala.

Based on the bulk and weight of raw material and finished goods:

- Heavy industries such as iron and steel
- Light industries that use light raw materials and produce light goods such as electrical goods industries.

Activity

Classify the following into two groups on the basis of bulk and weight of raw material and finished goods.

(i) Oil	(vi) Sewing Machines
(ii) Knitting needles	(vii) Shipbuilding
(iii) Brassware	(viii) Electric Bulbs
(iv) Fuse wires	(ix) Paint brushes
(v) Watches	(x) Automobiles

Agro-based Industries

Cotton, jute, silk, woollen textiles, sugar and edible oil, etc. industries are based on agricultural raw materials.

AP SCERT

நெகிழி மற்றும் பிவிசி குழாய்கள், இயந்திரங்கள் மற்றும் கருவிகள் போன்ற தங்களுடைய தயாரிப்புகளை விவசாயிகளுக்கு விற்கிறார்கள். இவ்வாறு உற்பத்தித் தொழிலின் வளர்ச்சி மற்றும் போட்டித்திறன் விவசாயிகளுக்கு அவர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு உதவுகிறது மட்டுமின்றி உற்பத்தி செயல்முறையைகளை மிகவும் திறமையாகவும் ஆக்கியுள்ளது.

உலகமயமாக்களின் இன்றைய உலகில் நமது தொழில்துறை மிகத் திறமையாகவும் போட்டித் தன்மையுடனும் இருக்க வேண்டும். தன்னிறைவு மட்டும் போதாது. நம் உற்பத்திப் பொருட்கள் சர்வதேச சந்தையில் உள்ள பொருட்களுக்கு இணையான தரத்தில் இருக்க வேண்டும். அப்போது தான் சர்வதேச சந்தையில் போட்டியிட இயலும்.

தொழில்களின் வகைப்பாடு

வானொலிப் பெட்டிகள், மின்விளக்குகள் தாவர எண்ணெய், சிமெண்ட், கண்ணாடி பொருட்கள், பெட்ரோல், தீப்பெட்டிகள், மோட்டார் வாகனங்கள், தானியங்கு வாகனங்கள், மருந்துகள் மற்றும் இதர பொருட்கள் போன்ற உங்கள் அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் பல்வேறு உற்பத்திப் பொருட்களை பட்டியலிடவும். ஒரு குறிப்பிட்ட அளவுகோலின் அடிப்படையில் பல்வேறு தொழில்களை நாம் வகைப்படுத்தினால் அவற்றின் உற்பத்தியை பற்றி நாம் நன்கு புரிந்துகொள்ள முடியும். தொழில்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

பயன்படுத்தப்படும் மூலப் பொருள் வளங்களின் ஆதாரத்தின் அடிப்படையில்:

- **விவசாய அடிப்படையிலானவை:** பருத்தி, கம்பளி, சணல் , பட்டு நெசவு, ரப்பர் மற்றும் சர்க்கரை, தேயிலை, காப்பி, சமையல் எண்ணெய்.
- **தாதுப்பொருள் அடிப்படையிலானவை:** இரும்பு மற்றும் எஃகு, சிமெண்ட், அலுமினியம்,இயந்திர கருவிகள், பெட்ரோலிய இரசாயனங்கள்.

அவற்றின் முக்கிய பங்கின் அடிப்படையிலானவை:

- அடிப்படை அல்லது முக்கியத்தொழில்கள் என்பது பிறபொருட்களைத் தயாரிப்பதற்கான மூலப்பொருளாகத் தங்கள் தயாரிப்புகளை வழங்குகின்றன. எடுத்துக்காட்டாக : இரும்பு மற்றும் எஃகு மற்றும் தாமிரத்தை உருக்குதல் அலுமினியம் உருக்குதல்.
- நுகர்வோரின் நேரடி பயன்பாட்டிற்காக பொருட்களை உற்பத்தி செய்யும் நுகர்வோர் தொழில்கள்: சர்க்கரை, பற்பசை, காகிதம், தையல் இயந்திரங்கள்,மின் விசிறிகள் போன்றவை.

மூலதன முதலீட்டின் அடிப்படையிலானவை:

- சிறியரக தொழில் என்பது ஓரலகு சொத்துக்களின் மீது அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச முதலீட்டினைக் குறிப்பதாகும். இந்த வரம்பு காலப் போக்கில் மாறிவிட்டது. தற்போது இதன் மீது அனுமதிக்கப்பட்ட தொகை ஒருகோடி ரூபாய்.

உரிமையின் அடிப்படையிலானவை:

- **பொதுத்துறை:** அரசு நிறுவனங்கள் மற்றும் அரசால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள். உதாரணம் – BHEL, SAIL
- **தனியார் துறை:** தனிநபர்கள் அல்லது தனிநபர்களின் குழுக்களுக்கு சொந்தமான மற்றும் அவற்றால் இயக்கப்படுபவை. உதாரணம் –TISCO, பஜாஜ் ஆட்டோ லிமிட்டெட், டாபர்
- **கூட்டுத் துறை:** அரசு மற்றும் தனிநபர்கள் அல்லது தனிநபர் குழுவால் இயக்கப்படுபவை. இந்திய எண்ணெய் நிறுவனம் [Oil India Ltd. (OIL)] பொது மற்றும் தனியார் துறையால் கூட்டாக உரிமை பெற்றவை.
- **கூட்டுறவுத்துறை தொழில்கள்:** இவை உற்பத்தியாளர்கள் அல்லது மூலப்பொருட்களை வழங்குபவர்கள் தொழிலாளர்கள் அல்லது இருவரும் இணைந்து உரிமை கொண்டு இயக்கப்படுபவை. அவர்கள் வளங்களை திரட்டி இலாபம் அல்லது நஷ்டங்களை விகிதாச்சார அடிப்படையில் பகிர்ந்து கொள்வர். மகாராஷ்டிராவில் உள்ள சர்க்கரைத் தொழில், கேரளாவில் உள்ள தென்னை நார்த்தொழில் போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

மூலப்பொருள் மற்றும் முடிவுப்பொருட்களின் மொத்த அளவு மற்றும் எடையின் அடிப்படையிலானவை:

- இரும்பு எஃகு போன்ற கனரகத் தொழில்கள்
- இலகுவான மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் இலகுரகத் தொழில்கள் மற்றும் மின்சாரப் பொருள் தொழில்கள்: இவை இலகுவான பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் ஆகும்.

செயல்

மூலப்பொருள் மற்றும் இறுதி பொருட்களின் அடிப்படையில் மொத்த அளவு மற்றும் எடையின் அடிப்படையில் பின்வருவனவற்றை இரண்டு குழுக்களாக வகைப்படுத்தவும்.

(i) எண்ணெய்	(vi) தையல் இயந்திரங்கள்
(ii) தையல் ஊசிகள்	(vii) கப்பல் கட்டுதல்
(iii) பித்தளை பொருட்கள்	(viii) மின்சார விளக்குகள்
(iv) உருக்கு கம்பிகள்	(ix) ஓவியத்தூரிகைகள்
(v) கடிகாரங்கள்	(x) தானியங்கு வாகனங்கள்

விவசாயம் சார்ந்த தொழில்கள்

பருத்தி, சணல், பட்டு, கம்பளி ஆடைகள், சர்க்கரை மற்றும் சமையல் எண்ணெய் போன்றவை விவசாய மூலப்பொருட்களின் மீது ஆதாரப்பட்டுள்ளது.



***Fig. 6.1:** Value addition in the textile industry*

Textile Industry: The textile industry occupies unique position in the Indian economy, because it contributes significantly to industrial production, employment generation and foreign exchange earnings. It is the only industry in the country, which is self-reliant and complete in the value chain i.e., from raw material to the highest value added products.

Cotton Textiles: In ancient India, cotton textiles were produced with hand spinning and handloom weaving techniques. After the 18th century, power-looms came into use. Our traditional industries suffered a setback during the colonial period because they could not compete with the mill-made cloth from England.

- The first successful textile mill was established in Mumbai in 1854.
- The two world wars were fought in Europe, India was a British colony. There was a demand for cloth in U.K. hence, they gave a boost to the development of the cotton textile industry.

In the early years, the cotton textile industry was concentrated in the cotton growing belt of Maharashtra and Gujarat. Availability of raw cotton, market, transport including accessible port facilities, labour, moist climate, etc. contributed towards its localisation. This industry has close links with agriculture and provides a living to farmers, cotton boll pluckers and workers engaged in ginning, spinning, weaving, dyeing, designing, packaging, tailoring and sewing. The industry by creating demands supports many other industries, such as, chemicals and dyes, packaging materials and engineering works.

While spinning continues to be centralised in Maharashtra, Gujarat and Tamil Nadu, weaving is highly decentralised to provide scope for incorporating traditional skills and designs of weaving in cotton, silk, zari, embroidery, etc. India has world class production in spinning, but weaving supplies low quality of fabric as it cannot use much of the high quality yarn produced in the country. Weaving is done by handloom, powerloom and in mills.

The handspun khadi provides large scale employment to weavers in their homes as a cottage industry.

Why did Mahatma Gandhi lay emphasis on spinning yarn and weaving khadi?

Why is it important for our country to keep the mill sector loomage lower than power loom and handloom?

Jute Textiles

India is the largest producer of raw jute and jute goods and stands at second place as an exporter after Bangladesh. Most of the mills are located in West Bengal, mainly along the banks of the Hugli river, in a narrow belt.

The first jute mill was set up near Kolkata in 1855 at Rishra. After Partition in 1947, the jute mills remained in India but three-fourth of the jute producing area went to Bangladesh (erstwhile East Pakistan).



படம் 6.1: *நெசவுத் தொழிலில் செயல்முறைகள்*

நெசவுத் தொழில்: நெசவுத் தொழில் இந்தியாவின் பொருளாதாரத்தில் தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளது. ஏனெனில் அது தொழில் துறை உற்பத்தி, வேலைவாய்ப்பு ஏற்படுத்துதல் மற்றும் அந்நிய செலாவணி ஈட்டுதல் ஆகியவற்றிற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது. அது சுய சார்பு மற்றும் மதிப்புச் சங்கிலியில் முழுமையானது. அதாவது மூலப்பொருளிலிருந்து உயர் மதிப்பு சேர்க்கப்பட்ட உற்பத்திகள் வரை கொண்ட நாட்டின் ஒரே தொழில் ஆகும்.

பருத்தி துணிகள்: பண்டைய இந்தியாவில் பருத்தி ஆடைகள் கைநூற்பு மற்றும் கைத்தறி நெசவு நுட்பங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டன. 18ஆம் நூற்றாண்டிற்குப் பின் விசைத் தறிகள் பயன்பாட்டிற்கு வந்தன. குடியேற்ற ஆட்சி காலத்தின்போது நமது மரபு சார்ந்த தொழில்களுக்கு பின்னடைவு ஏற்பட்டது. ஏனெனில் அவை இங்கிலாந்தின் ஆலைகள் மூலம் தயாரிக்கப்பட்ட துணிகளுடன் இவற்றால் போட்டியிட முடியவில்லை.

- வெற்றிகரமான முதல் பருத்தி ஆலை 1854ல் மும்பையில் நிறுவப்பட்டது.
- இரண்டு உலகப்போர்களும் ஐரோப்பாவில் போரிடப்பட்டன. இந்தியா ஆங்கிலேயரின் குடியேற்ற நாடாக இருந்தது. இங்கிலாந்தில் துணி தேவையாக இருந்தது. எனவே அவர்கள் பருத்தி தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தனர்.

ஆரம்ப ஆண்டுகளில் பருத்தி நெசவுத் தொழில் மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தின் பருத்தி வளரும் மண்டலத்தில் குவிந்திருந்தது. மூலப் பருத்தி கிடைத்தல் சந்தை, அணுகக் கூடிய துறைமுக வசதிகள், தொழிலாளர், ஈரமான வானிலை போன்றவை அதன் உள்ளூர்மயமாக்கலுக்குத் துணை புரிந்தன. இத்தொழில் விவசாயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டது. விவசாயிகள், பருத்தி காய் பறிப்பவர்கள் மற்றும் விதை நீக்கம், நூல் நூற்றல், நெசவு, சாயமிடல், வடிவமைத்தல், தையல் மற்றும் தைத்தல் கட்டுதல் போன்றவற்றில் ஈடுகட்டுள்ள தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குகிறது. இத்தொழில் தேவைகளை உருவாக்குவதன் மூலம் மற்ற பல தொழில்களான இரசாயணங்கள் மற்றும் வண்ணமிடல் பொருட்களை கட்டுதல் மற்றும் பொறியியல் பணிகளுக்கு ஆதரவு அளிக்கிறது.

நூல் நூற்பு மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் தமிழ்நாட்டில் தொடர்ந்து நெசவுத் தொழிலானது பருத்தி, பட்டு, சரிகை போன்றவற்றில் நெசவு செய்யும் வடிவமைப்புகள் போன்றவற்றில் மிகவும் பரவலாக்கப் பட்டுள்ளது. இந்தியா நூற்பு உற்பத்தி உலகத் தரம் வாய்ந்தது. ஆனால் நெசவு பொருட்கள் உற்பத்தி, குறைந்த தரம் கொண்ட துணியை வழங்குகிறது. ஏனெனில் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உயர் தரமான நூலை பயன்படுத்துவதில்லை. நெசவானது கைத்தறி விசைத்தறி மற்றும் ஆலைகளில் மேற்கொள்ளப்படுகிறது.

கைநூற்புக் கதர் தொழில் நெசவாளர்கள் தங்கள் வீடுகளில் குடிசைத் தொழிலாக மேற்கொள்வதால் அவர்களுக்கு பேரளவில் வேலைவாய்ப்புகளை வழங்குகிறது.

மகாத்மா காந்தி நூல் நூற்பு மற்றும் கதராடை நெய்தலுக்கு ஏன் அதிக முக்கியத்துவம் தந்தார்?

நம் நாடு நெசவு ஆலைகளை விசைத்தறி மற்றும் கைத்தறியைக் குறைவாக வைத்திருப்பதற்கான முக்கியத்துவம் என்ன?

சணல் ஜவுளிகள்:

இந்தியா சணல் மூலப்பொருள் மற்றும் சணல் பொருட்களை உற்பத்தி செய்வதில் மிகப் பெரிய உற்பத்தியாளராக உள்ளது. சணல் ஏற்றுமதி செய்வதில் வங்காள தேசத்தை அடுத்து இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. பெரும்பாலன ஆலைகள் மேற்கு வங்காளத்தின் ஹூக்ளி நதிக்கரையில் ஒரு குறுகிய மண்டலத்தில் அமைந்துள்ளன.

முதல் சணல் ஆலை கொல்கத்தாவின் ரிஷ்ராவில் 1855ல் அமைக்கப்பட்டது. 1947 ல் பிரிவினைக்குப் பின் சணல் ஆலைகள் இந்தியாவில் இருந்தன. ஆனால் நான்கில் மூன்று பங்கு சணல் உற்பத்தி செய்யும் பகுதி (முந்தைய கிழக்கு பாகிஸ்தானான) பங்களாதேசஷிற்குச் சென்றுவிட்டன.

India: *Distribution of cotton, woollen and silk industries*



இந்தியா : பருத்தி, கம்பளி மற்றும் பட்டுத் தொழில்களின் பரவல்

Factors responsible for their location in the Hugli basin are: proximity of the jute producing areas, inexpensive water transport, supported by a good network of railways, roadways and waterways to facilitate movement of raw material to the mills, abundant water for processing raw jute, cheap labour from West Bengal and adjoining states of Bihar, Odisha and Uttar Pradesh. Kolkata as a large urban centre provides banking, insurance and port facilities for export of jute goods.

Sugar Industry

India stands second as a world producer of sugar but occupies the first place in the production of *gur* and *khandsari.* The raw material used in this industry is bulky, and in haulage its sucrose content reduces. The mills are located in Uttar Pradesh, Bihar, Maharashtra, Karnataka, Tamil Nadu, Andhra Pradesh, Gujarat, Punjab, Haryana and Madhya Pradesh. Sixty per cent mills are in Uttar Pradesh and Bihar. This industry is seasonal in nature so, it is ideally suited to the cooperative sector. Can you explain why this is so?

In recent years, there is a tendency for the mills to shift and concentrate in the southern and western states, especially in Maharashtra, This is because the cane produced here has a higher sucrose content. The cooler climate also ensures a longer crushing season. Moreover, the cooperatives are more successful in these states.

Mineral-based Industries

Industries that use minerals and metals as raw materials are called mineral-based industries. Can you name some industries that would fall in this category?

Iron and Steel Industry

The iron and steel industry is the basic industry since all the other industries — heavy, medium and light, depend on it for their machinery. Steel is needed to manufacture a variety of engineering goods, construction material, defence, medical, telephonic, scientific equipment and a variety of consumer goods.

Activity

Make a list of all such goods made of steel that you can think of.

